MASTER NEGATIVE NUMBER

6166.47

நவசக்தி

சிலம்பு 5, பரல் 4

November 14, 1924

Record no. 2305

Navacakti

Cilampu 5, paral 4

November 14, 1924

Record no. 2305

D. No. M. 1500 "NAVASAKTI" WEEKLY

நவசக்தி

வாரப்பதிப்புச் சந்தா விவரம்.	
வருட சந்தா	5 0
ஆறுமாத சந்தா	3 0
வெளி நாடு-வருட சந்தா	6 0

வாரப் பதிப்பு

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது.

விளம்பர விகிதம்.	
கலம் 1-க்கு வாரம் 1-க்கு ரு. ...	7 0
சில்லரை விளம்பரம் 1 அங். ...	0 8

முன்பணமின்றி விளம்பரஞ் செய்யப்படமாட்டாது.

"வீடு பெறநில்" "மாற்றுனுக் கிடங்கொடேல்" "ஏற்பதிகழ்ச்சி"

சிலம்பு ரு. ரத்தாக்ஷி௵ ஐப்பசி௴ உகூ௳ (14—11—24) பரல் ௪

[ஒருவன் செய்யும் தியாகத்தின் அளவினதாகவே, அவன் புகழும் செல்வாக்கும் நிலைத்து நிற்கும் என்பதை அடிப்படையாகக்கொண்டு, ரெவரண்டு ஜே. எஸ். சான்ட்லர் என்பவர் எழுதிய சிறந்த கட்டுரை ஒன்று 'கிறிஸ்நவக் கல்லூரிப் பத்திரிகை'யின் 1889-ம் வருஷம் அக்டோபர்மாதத்துச் சஞ்சிகையில் காணப்படுகிறது. இச்சிறந்த கட்டுரை, கல்லும் கரைந்துருகும்படியான பல அரியவிஷயங்களை அடக்கிக்கொண்டிருப்பதால், இதன் சாரத்தை இங்கு வெளியிடுகின்றோம். நேயர்கள் கவனத்துடன் படிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.]

* * *

ஒருவன் புகழை அடைவதற்கு என்னென்ன வழிகள் இருக்கின்றன என்பதைப் பற்றி இங்கு நான் கூறப்போவதில்லை. இந்தப் புகழ், ஒருவனுடைய சக்திக்குத் தகுந்தவாறும், அவன் வாழ்க்கையில் [illegible] களாலும், அவன் பொறுப்பாளியல்லாத வேறு பலவற்றாலும் அவனை வந்தடைகிறது. சாதாரண சக்தியும், மிதமான வாழ்க்கைச் சுகங்களும் உள்ளவர் எப்படி அழியாச் செல்வாக்கைப் பெறலாம் என்பதைப்பற்றியே இங்குக் குறிப்பிடுகிறேன். தியாகத்தின் பயனாகவே ஒருவன் செல்வாக்கை அடையமுடியும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாயிருக்கும்.

* * *

பண்டைக்காலத்தில் கிரேக்கர்கள், தங்கள் சத்துருக்களால் வெல்லப்பட்ட பிறகும், செல்வாக்குடனிருந்தார்கள். எப்படி? எங்கெங்கு கிரேக்கர்களின் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டதோ, மசிடோனியாவிலாக, சின்ன ஆசியாவிலாக, மத்தியதரைக் கடலிலுள்ள தீவுகளிலாக, எங்கும் தங்கள் நாட்டுணர்ச்சியைப் பரப்பி வந்தார்கள். இதன் பயனாக, சின்ன ஆசியா, பாலஸ்தீனம், அலெக்ஸாந்திரியா முதலிய நாடுகள் உரோமர்களுடைய ஆட்சிக்குட்பட்ட பிறகும், அந்நாட்டு ஜனங்கள் கிரேக்க ஆசாரத்தையே பின்பற்றி வந்தார்கள்; கிரேக்க மொழியையே பேசினார்கள்.

* * *

ஒவ்வொரு மனிதன் முன்னிலையிலும் ஒவ்வொருபலிபீடம் இருக்கிறது. ஒருவன், அதன் மீது தன்னைத் தியாகம் செய்து, அத்தியாக ஒளி அங்கிருந்து வீசுமானால் மனித சமூகத்தை ஆட்டுவிக்கும் சக்திகளுள் ஒன்றாக அவன் ஆகிவிடுகிறான். ஒருவன், வசீகரமுள்ள முகமுடையவனாயிருக்கலாம்; மிகுந்த சாமர்த்தியமுடையவனாயிருக்கலாம்; பண்டிதனாயிருக்கலாம்; தன் சமூகத்தினரிடத்தில் அந்தஸ்துடையவனாயிருக்கலாம்; தன் தொழிலில் நிபுணனாயிருக்கலாம். இவனுக்குச் சொற்ப செல்வாக்கே இருக்கும். ஆனால் இச்செல்வாக்கு அநித்தியமானது. அவன் இறந்ததும் அவன் பெயர் மறைந்துவிடும். இதற்குக் காரணம் என்ன? அவன் எவ்வித தியாகத்தையும் செய்யவில்லை. சுயநலப் பிரியனாகவே அவன் வாழ்ந்தான். ஏதாவது ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவானாயின் சுயநலம் அவனைக் குறுக்கிடுகிறது; தன் சுகம், அந்தஸ்து, கௌரவம் முதலியவைகளைக் கவனிக்கிறான். பாபு கேசவ சந்திர சேனர், நிலையான செல்வாக்கை யடைதற்குரிய தியாகங்களைச் செய்தார். ஆனால், தன் குமாரத்தியை ஒரு சுதேச மன்னருக்கு மணம் புரிவிக்க விரும்பியதால், அவருடைய கௌரவமும் சுயநலமும் அவர் செல்வாக்கைக் குன்றச் செய்தன.

* * *

உலகத்தை இயக்குவிக்கும் சக்திகளிடையில் மனிதன் அற்பமானவன்; சமுத்திரத்தில் விழும் நீர்த்துளிபோல்வான். இத்

தியாகத்தின் மேன்மை

தகையவன், தனக்கிருக்கும் அற்ப சக்திகளையும் தன்னை மேன்மைப் படுத்திக்கொள்ளும் பொருட்டே உபயோகித்துக்கொள்வானாயின், அவன் விரைவில் மறக்கப்படுகிறான். ஆனால் அதற்கு மாறாக, தன்னைத் தியாகஞ்செய்து, அதன்பயனாக ஏற்படும் பலத்தை நிரந்தரமான ஒரு சக்தியுடன் சேர்த்துவிடுவானாயின், அல்லது அழியாத ஓர் உண்மையை விளக்குவானாயின், அதனால் அவன், தனக்கப்பாற்பட்ட சக்தியுடன் ஐக்கியப்பட்டுவிடுகிறான். உலகத்தில் பலர், நல்ல ஒரு காரியத்திற்குத் தங்களை அர்ப்பணம் செய்துவிடக்கூடாத சுயநல முடையவராய் இருக்கின்றனர். ஒருவன் நல்ல காரியத்திற்கோ, கெட்ட காரியத்திற்கோ தன் அனைத்தையும் ஒப்புக்கொடுத்து விடுவானாயின், அவன் அழியாப்புகழை அடைவான். ஆனால் பெரும்பாலோர் கெட்ட காரியத்திற்காகத் தங்களை அர்ப்பணம் செய்து விடுவதில்லை. இங்கு [illegible] தியாகத்தைப்பற்றிக் கூறும்போது, தன்னலத்தைப் பேணல், தன்னைக் காப்பாற்றிக்கொள்ளல் முதலியவைகளுக்கும் முற்கூறிய தன்னலமற்ற தியாகத்துக்கும் வேற்றுமை இருக்கிறதென்பதை அறிந்துகொள்ளல் வேண்டும். ஒருவன் களியாடல்களுக்கே தன்னை அர்ப்பணம் செய்துவிடுவானாயின் அவன் தன் சுகத்தை நாடுகிறவனேயாகிறான். ஆனால், ஒருவன், தன் வாழ்க்கையை நடத்தும் பொருட்டுத் தன் முழுக்கவனத்தையும் அதில் செலுத்துவானாயின், அவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்பவனாகிறான்.

* * *

ஒருவன் தன் சுகத்துக்காக அல்லாமல், தன் நாட்டிற்கும் பிறர்க்கும் நன்மைசெய்வதற்காகப் பணத்தைச்சம்பாதிப்பதிலேயே தன்னை அர்ப்பணம் செய்துவிடலாம். இத்தகையவர் பலர் தோன்றியிருக்கிறார். இவர்களால் பலர் நன்மையடைந்திருக்கின்றமையால் இவர்கள் நிலையான செல்வாக்கையடைந்திருக்கிறார்கள். கைத்தொழில் அபிவிருத்திக்காகச் சிலர் தங்களை அர்ப்பிதம் செய்துவிடுகிறார்கள். தங்கள் வாழ்க்கையை நடத்தும்பொருட்டே சிலர் இக்கைத்தொழிலில் இறங்கினர் என்பது உண்மைதான். ஆனால் இவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய அளவைவிட அதிகமான காரியங்களைச்செய்திருக்கிறார்கள். சில சாஸ்திர அறிஞர்கள், தங்களுடைய வருவாயையும், தேக நலத்தையும் கூடக்கவனியாமல், பல புதிய விஷயங்களைக் கண்டுபிடிப்பதில் தங்களை அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். இங்ஙனம் தங்களைத் தியாகம் செய்தவருள் ஸ்ரீமான் தாமஸ் எடிஸனையும் கூறலாம். அவன், தன் இளமை முதற்கொண்டே புதிய விஷயங்களைக் கண்டுபிடிப்பதில் ஊக்கங் காட்டிவந்தான்; இதற்காகத் தன் முழுக்கவனத்தையும் செலவழித்தான். சொற்பகல்விப் பயிற்சியோடுகூடிய அவன் ரெயில்வண்டிகளில் பத்திரிகைகள் விற்றுவந்தான். ஒரு ரெயில் தொடரில், சிறிய ஆராய்ச்சிசாலை யொன்று அமைத்து பல ஆராய்ச்சிகளைச் செய்து வந்தான். இதன் பயனாக ரெயில்வண்டியே நெருப்புப் பற்றிக்கொண்டது. பிறகு தந்தி இலாகாவில் ஓர் உத்தியோகம் பெற்றான். இங்கே பலவித மான ஆராய்ச்சிகளைச் செய்தான். இதன் பயனாக, ஒரே கம்பியின் மூலம் பல செய்திகளை அனுப்புவதைக் கண்டுபிடித்தான். டெலிபோன், மின்சாரம், கிராமபோன் முதலியவைகளில் பல நூதன முறைகளை ஏற்படுத்தினான். இவைகளினால் ஜனங்களுக்குப் பல நன்மைகள் உண்டாயின. எடிஸனைப்போல் நாம் எல்லாரும் ஆராய்ச்சிக்காரராக இருக்க முடியாது. ஆனால், நம் சகோதரர்களுக்கு நன்மை தரும்படியான காரியத்தில் ஈடுபட்டு நம் அனைத்தையும் தியாகம் செய்யலாம்.

சுமார் நானூற்று ஐம்பது வருஷங்களுக்கு முன்னர் கூடன்பர்க் என்பவன் மரக்கருவி [illegible]கொண்டு அச்சடிக்கும் முயற்சியில் இரகசியமாக ஈடுபட்டிருந்தான். இவனுடன் இரண்டு பங்குதாரர்கள் இருந்தார்கள். இவர்கள்; தங்கள் முயற்சியை இரகசியமாக வைத்திருக்கவேண்டுமென்ற நிபந்தனை இருந்தது. இவர்களில் ஒருபங்குதாரன் இறந்துபோனான். இவன் சந்ததியார், மேற்படி இரகசியங்களைத் தங்களுக்கு வெளியிடவேண்டுமென்று கூடன்பர்க்கின்மீது வழக்குத்தொடுத்தார்கள். இதனால் அவனுக்கு ஏராளமான பொருள் நஷ்டம் ஏற்பட்டது. எனவே கூடன்பர்க் வேரோரிடத்திற்குச் சென்று ஜான்பாஸ்டு என்ற ஒரு வெள்ளிவேலை செய்வோனைப் பங்குதாரனாகச் சேர்த்துக்கொண்டான். அவன் கூடன்பர்க்குக்குப் பணம் கொடுத்து [illegible] எல்லாவற்றையும் இரகசியமாக [illegible]ண்டிருப்பதாகவும் உறுதி கூறினான். இவர்களிடம் வேலை செய்துகொண்டிருந்த குமாஸ்தா ஒருவன், இருவருக்கும் காலாவட்டத்தில் பகைமை உண்டாக்கிவிட்டான். இதனால் பாஸ்ட் என்பவன் தனக்குவேண்டிய சாமான்களைச் சேகரித்துக்கொண்டு தான் கொடுத்த கடனைத் திருப்பிக்கேட்டான். கூடன்பர்க்குக்கு, கடனைத் திருப்பிக்கொடுக்க முடியவில்லை. எனவே, தன் சாமான்கள் அனைத்தையும் பாஸ்டிடம் ஒப்புவித்துவிட்டான். அப்பொழுது பைபில் புத்தகம் முக்கால்பாகம் அச்சிடப்பட்டு முடிந்திருந்தது. அதையும் கொடுத்துவிட்டான். ஆயினும், கூடன்பர்க், தன்முயற்சியை விடாமல், மீண்டும்தன் தொழிலை ஆரம்பித்து, தனக்கு விரோதிகளாயிருந்தவர்கள் அச்சிட்ட நூல்களைக் காட்டிலும் சிறந்த நூல்களை அச்சிட்டான். இதனால் இவனுக்கு அதிக பொருள் வருவாயில்லை. ஆனால் இத்தொழிலுக்கே இவன் தன்னைத் தியாகம் செய்துவிட்டான். சுமார் நானூறு ஆண்டுகள்வரை இவன் புகழ் அழியாதிருந்தது.

* * *

தேசத்தின் பொருட்டு எல்லாவற்றையும் தியாகம் செய்தல் மிகவும் மேலானதாகும். எந்த நாடும், அந்நாட்டிடை உதித்த தேசபக்தர்களின் இரத்தத்தினாலன்றி முன்னேற்றமடைந்ததில்லை. இத்தாலிய வீரனாகிய காரிபால்டி, தன் இளமைகாலத்தில் கனவிலும் ரோமாபுரி முன்னேற்றமடைய வேண்டுமென்றே நினைத்துக்கொண்டிருந்ததாகவும், அதைப்பற்றியே பிரார்த்தனை செய்துகொண்டிருந்ததாகவும் கூறுவான். இத்தாலியர்கள் தங்கள் தாய்நாட்டின் பொருட்டு யுத்தம் செய்யப் போவதாகக் கேள்விப்பட்டானாயின், அதற்காகத் தன் உயிரைக்கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்து விடுவான். ஆனால் இவன் மாலுமித்தொழில் செய்துகொண்டிருந்தானாகையால் அநேக கஷ்டங்களை அநுபவிக்க வேண்டியிருந்தது. இவன் இயற்கையிலேயே அஞ்சாநெஞ்சு கொண்டவனாயிருந்தான். இளைஞனாயிருக்கும்போது ஒரு சமயம் ஒரு வண்ணாத்தி தண்ணீரில் முழுகிப் போகும் தறுவாயிலிருக்க அவளைக் கரையேற்றினான். கடைசியில் இவன் எண்ணம் பலித்தது. இத்தாலியின் பொருட்டு இவன்செய்த ஊழியங்களை யாரே அறியார்? அமெரிக்காவிலுள்ள பாஸ்டன் என்னுமிடத்தில் நடைபெற்ற ஒரு யுத்தத்தில், தளபதிவாரன் என்பவன் இறந்து போனான். இறக்குந்தறுவாயில் அவன், "என் தாய்நாட்டின் பொருட்டு நான் இறப்பது எவ்வளவு இனிமையாயிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே ஆவிதுறந்தான். அதே யுத்தத்தில், தளபதி வாஷிங்டன், ஒரு நதிக்கப்பாலுள்ள சத்துருக்களின் இருப்பிடத்துக்குச்சென்று அவர்களுடைய இரகசியங்களை அறிந்துவருவதற்கு ஒரு தொண்டன் வேண்டுமென்று தெரிவித்தான். உடனே ஓர்இளைஞன் வந்து, தான்அவ்வேலையைச் செய்வதாக ஒப்புக்கொண்டு அப்படியே சத்துருக்களின் பாடிவீட்டுக்குச் சென்று எல்லா விஷயங்களையும் சேகரித்துக்கொண்டு திரும்பும் வழியில் கண்டு பிடிக்கப்பட்டு கைதியாக்கப்பட்டான். மறுநாள் இவன் தூக்கிலிடப்படும் சமயத்தில், "என் தாய்நாட்டிற்காக அர்ப்பணம் செய்ய மற்றோர் உயிர் இல்லையே என்ற ஒரு வருத்தமே எனக்கு இருக்கிறது" என்று கூறினான். இத்தகைய உறுதிகொண்ட பலர் அடங்கிய அச்சிறு சேனைக்குத் தலைவராயிருந்த வாஷிங்டன், பல யுத்தங்களில் தோல்வியடைந்திருந்த போதிலும், தேசத்தின் பொருட்டு அரிய தியாகங்களைச் செய்திருக்கிறான். அமெரிக்கா ஐக்கிய நாடுகள் உள்ளவரை, அவன் பெயர் அழியாது. இப்பொழுதும் அவனுடைய பிறந்தநாள் ஒவ்வொரு வருஷமும் கொண்டாடப்படுகிறது.

* * *

மேற்கூறிய எல்லாவற்றையும்விடச் சிறந்தது மனித சமூகத்தின் நன்மைக்காகத் தியாகம் செய்வதேயாகும். மேற்கூறப்பட்ட தியாகங்களினால் [illegible] அளவுக்குட்பட்ட வகுப்பாருக்கோ, தேசத்தாருக்கோ நன்மை உண்டாகிறது. ஆனால் இந்தத் தியாகத்தினால் ஏற்படும் நன்மை அளவுகடந்து நிற்கிறது. உரோமர்கள், கோத்தர்களை ஜயித்துவிட்டு வெற்றிக் கொண்டாட்டங் கொண்டாடிக்கொண்டிருந்தார்கள். பலவித பந்தயங்கள் நடைபெற்றன. சிலம்பக்காரர்கள், தங்கள் திறத்தைக் காட்டத்தோன்றினார்கள். இந்தச் சிலம்புச்சச்சரவு மிகக்கொடுமையானது. இச்சமயத்தில் வயோதிகமான, சிற்றுடை அணிந்த, தலையிலும் காலிலும் ஒன்றுமில்லாத ஒருவன் அவர்களிடையே தோன்றி, இந்தக் குரூரமான, உயிரைப் போக்கவல்ல விளையாட்டை ஒழிக்குமாறு வேண்டிக்கொண்டான். அப்பொழுதிருந்த உற்சாகத்தில், ஜனங்கள் இவன் வார்த்தைகளைக் கவனிக்கவேயில்லை; "சிலம்பக்காரர்களே! ஆகட்டும்" என்று அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். சிலம்பக்காரர்கள்; இந்த வயோதிகத் துறவியை ஒதுக்கித்தள்ளிவிட்டுத் தங்கள் சச்சரவில் ஈடுபடத்தொடங்கினார்கள். ஆனால் இவன் சிறிதும் பின்னிடையாமல் அவர்கள் ஒருவர்க்கொருவர் மோதிக்கொள்ளாதபடி இடையே நின்றான். "அவனை வெட்டி வீழ்த்துங்கள்." என்று ஜனங்கள் கூச்சலிட்டார்கள். சிலம்பக்காரர்கள், அவனைத் தங்கள் 'வாளால் வெட்டி வீழ்த்தியதும் ஜனங்கள் அவன் நன்றாக இறந்துபோகும் வரை, அவன்மீது கல்லெறிந்தார்கள். பிறகு விசாரித்ததில், இவன் ஈஸ்டர் பண்டிகையைக்கொண்டாட ஆசியாகண்டத்திலிருந்து ரோமாபுரிக்கு வந்தவனென்று தெரியவந்தது. இவன் உயிர் துறந்ததன் பயனாக, சிலம்பச்சச்சரவே உரோமாபுரியிலிருந்து ஒழிந்தது.

* * *

இங்ஙனமே மனிதசமூகத்தின் நன்மைக்காகவே தங்கள் ஆயுள்முழுவதும் உழைத்த பிரான்சு தேசத்தானாகிய ஓபர்லீனையும், இங்கிலாந்து தேசத்தானாகிய வில்பர்போர்ஸையும் நாம் மறக்க முடியாது. ஓபர்லீன் என்பவன் ஸ்ட்ராஸ்பர்க் சர்வகலாசாலையில் தன் படிப்பை முடித்துக்கொண்டு எழுவருஷம் வரை, ஸ்ட்ராஸ்பர்க்கிலேயே, ஒரு வைத்தியன் வீட்டுப்பிள்ளைகளுக்குப் போதகாசிரியனாக இருந்தான். பிறகு கிறிஸ்தவமதப் பிரசாரகனானான். இவன் வசித்த ஆல்சேஸ் ஜில்லா, கரம்பு நிலங்களைக் கொண்டதாயும், சரியான பாதைகள் இல்லாததாயும் இருந்தது. ஜனங்கள் ஏழைகளாயும் அறியாமையில் ஆழ்ந்து கிடந்தும் இருந்தார்கள். விவசாயத்தைப்பற்றி இவர்களுக்கு ஒன்றுமே தெரியாமலிருந்தது. சுமார் அறுபது ஆண்டுகள் ஓபர்லீன் இவர்களிடையே உழைத்தான். இவ்வுழைப்பினால் ஏற்பட்ட பயன் என்ன? நல்ல பாதைகள், வாராவதிகள், குடியிருக்க வசதியான வீடுகள் முதலியன கட்டப்பட்டன. பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. கரம்பாகக்

கிடக்க இந்த ஜில்லா செழுமை[illegible]யதாக மாறிவிட்டது. எல்லாரும் நன்ருக[illegible]ழுதப் படிக்கத் தெரிந்துகொண்டார்கள். [illegible]இவை யனைத்தையும் ஓபர்லீன் ஒருநாளி[illegible] செய்து விடவில்லை. எத்தனையோ தடைக[illegible]தள்ளிக் கொண்டு, தன்னலத்தைச் சிறிது[illegible]கவனியாமல் இந்தக் காரியங்களைச் செய்[illegible] இதே காலத்தில், இங்கிலாந்தில், செல்வ[illegible] குடும்பத்தில் பிறந்த வில்லியம் வி[illegible]ர்போர்ஸ் அடிமை வர்த்தகத்தை ஒழிக்கப் [illegible]ாடுபட்டுக் கொண்டிருந்தான். பார்லிமெ[illegible] அங்கத்தினையிருந்த இவன், 1791-[illegible] வருஷம், காமன்ஸ் சபையில், ஆப்பிரி[illegible]விலிருந்து நீக்ரோவர்களைப் பிரிட்டிஷ் நா[illegible]ில் இறக்குமதி செய்யக்கூடாதென்ற[illegible] மசோதா கொண்டுவந்தான். இது தோல்வியுற்றுப் போயது. இங்ஙனம் பதினறு வருஷம் இம் மசோதாவைக் கொண்டுவந்து கடைசியில் வெற்றிபெற்ருன். அடிமை வியாபாரத்தை ஒழிக்க இவன் செய்த முயற்சிகள் எண்ணிறந்தன. இவன், தன் ஆஸ்தியின் மூன்றில் ஒரு பாகத்தைத் தருமத்திற்கென்றே செலவழித்தான்.

* * *

கௌதம புத்தரைக் கவனிக்கலாம். அரசபோகத்தைத் துறந்து ஏன் எங்கணும் அலைந்தார்? அரண்மனையிலிருந்தால், அவரால் என்னென்ன நன்மைகள் ஏற்படுமோ அதைவிட ஆயிரமடங்கு அதிகமான நன்மைகள், அவ்வரச போகத்தைத் துறந்த பிறகு அவரால் ஏற்பட்டன. மனித சமூகத்தின் நன்மைக்காகவே, அவர் தன்னை அர்ப்பணம் செய்துவிட்டார்.

* * *

ஆனல் இவைகள் எல்லாவற்றையும்விட கடவுளுக்குத் தன் அனைத்தையும் ஒப்புக்கொடுத்து விடுவதே சிறந்த தியாகமென்று எனக்குத் தோன்றுகிறது. மேலே கூறப்பட்ட ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குறையைக் கூறலாம். ஆனல் ஆண்டவனுக்கு நம்மை ஒப்புக்கொடுப்பதில் எவ்வித குறையும் கூறமுடியாது. அவன் சந்நிதானமாகிற பலிபீடத்திலேயே நம்மைத் தியாகம் செய்யவேண்டும். இதுவே சிறந்த தியாகம். ஆண்டவனிடத்தில் செலுத்தப்படும் அன்பு வரம்பிலாதது. கடவுள் நமக்குச் செய்திருக்கும் எண்ணிறந்த உதவிகளுக்குக் கைம்மாருக நாம் எதைத்தான் செய்யக்கூடாது?

* * *

சிலருடைய உருவமும், தேக வனப்பும் அமைப்பும் சேர்ந்து, பலரை அவர் வசமாக்கி விடுகின்றன. நப்போலியன் போனபார்ட், இத்தகைய கம்பீர புருஷர்களுள் ஒருவன். இவன் வீரர்கள், இவனிடத்தில் பக்தி விசுவாசத்துடன் உண்மையாக உழைத்து வந்தார்கள்; தங்கள் உயிரையே இவன் பொருட்டு அர்ப்பணம் செய்தார்கள். கோல்ட்ஸ்மித்தும், இத்தகைய வசீகர புருஷர்களில் ஒருவன். இவனிடத்தில் ஈடுபடாதார் எவருமிலர்.

* * *

மேற்கூறப்பட்ட பலவகைப்பட்ட தியாகங்கள் யாவும் ஆண்டவன் பணிக்கு உட்பட்டனவேயாகும். கடவுள் பணிசெய்வது பிற துறைகளில் உழைப்பதற்கு முரண்பாடாகாது. ஆண்டவன் வடிவாயிலங்கும் இவ்வுலகத்தில் செய்யப்படும் பணிகள்யாவும் அவன் பணியேயாம். சகோதரர்களே! இந்த உதாரணங்கள் நமக்கு உபயோகப்படாவா? இவைகளை நாம் முன்மாதிரியாகக் கொள்ளக்கூடாதா? இவைகளை நாம் அநுபவத்தில் கொண்டுவர முயற்சி செய்யலாகாதா? மேற்கூறப்பட்டவரிற் சிலருக்கு இருந்த வசதிகள் நமக்கு இல்லாமலிருக்கலாம். ஆனல் அவர்களுடைய தியாக உணர்ச்சியை நாம் கைக்கொள்வோமாக. அதனல் எண்ணரிய நன்மைகளைச் செய்து அழியாத செல்வாக்கைப் பெறலாம்.

திருவண்ணமலை மகாநாடு

பஞ்சு கொட்டி நூற்கும் காட்சி

(தமிழ்நாடு கதர்போர்ட் காரியதரிசியிடமிருந்து)

பஞ்சு கொட்டுவதும், நூல் நூற்பதும் நமது தேசத்திற்கு இன்றியமையாத வேலைகளென காந்தியடிகள் ஓயாது வற்புறுத்தி வருகின்றனர். அவ்வேலைகளை தலைவர்களும் முக்கியஸ்தர்களும் செய்து காட்டினல்தான் பொது ஜனங்களும் அவற்றில் ஈடுபடுவார்களென்பது நிச்சயம்.

ஆகவே திருவண்ணமலை மகாநாட்டில் காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும் காலையிலும் மாலையிலும் குறிப்பிட்ட நேரங்களில் கோஷ்டியாக பஞ்சு கொட்டவும் நூல் நூற்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அக்கோஷ்டியில் தாங்களும் ஒருவராகச் சேரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கள் சம்மதத்தை காரியதரிசி, தமிழ்நாடு கத்தர்போர்டு C/O வரவேற்புக் கமிட்டி, திருவண்ணமலை என்ற விலாசத்திற்கு தெரிவிக்கக்கோருகிறேன்.

கூடுமானல் ராட்டை, வில், பட்டை போட்ட பஞ்சு முதலியவைகளை எடுத்துவருவது நலம். கத்தர்போர்டாரும் தங்களாலான ஏற்பாடு செய்வார்கள்.

ஒற்றுமைத்திட்டம்

தலைவர்களின் அறிக்கை

அரசாங்க அடக்குமுறைக்குப் பதில்

கல்கத்தாவில் நடைபெற்ற தலைவர்களின் மகாநாட்டின் முடிவில் மகாத்மாகாந்தி, தேசபந்து தாஸ், பண்டித நேரு இம்மூவரும் கையொப்பமிட்டுப் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையின் விவரம் பின்வருமாறு:—

இந்தியாவிலுள்ள எல்லாக்கட்சிகளினுடைய இலட்சியமும் சுயராஜ்யமாயிருந்தும், தேசத்தில் பிளவுகள் ஏற்பட்டுப் பற்பல கட்சிகளும் பரஸ்பரம் எதிரிடையான வேலை செய்வதாகக் காணப்படுவதாலும், இத்தகைய எதிரிடையான வேலை சுயராஜ்ய சித்திக்குத் தடையாயிருப்பதாலும், கூடியவரையில் அக்கட்சிகள் எல்லாவற்றையும் காங்கிரஸ் மேடையில் ஒன்று சேர்ப்பது நன்மை பயக்கத்தக்கதாதலாலும்;

காங்கிரஸிற்குள்ளேயே இருகட்சிகள் ஏற்பட்டிருப்பதன் பயனகத் தேசத்திற்குத்தீங்கு விளைந்து வருவதாலும், பொதுவான இலட்சியத்தின் பொருட்டு அவ்விருகட்சிகளை ஒன்று சேர்த்தல் அவசியமாதலாலும்;

கவர்னர் ஜெனரலினுடைய அநுமதியின் பேரில் வங்காளத்தில் மாகாண அரசாங்கத்தினல் அடக்கு முறை தொடங்கப்பட்டிருப்பதாலும்;

உண்மையில் மேற்படி அடக்கு முறை பலாத்காரத்தை மேற்கொண்ட ஒரு கட்சியை ஒடுக்குவதற்காகவன்றி, வங்காளத்திலுள்ள சுயராஜ்யக்கட்சியை அதாவது சட்ட அமைப்புக்குட்பட்ட ஒழுங்குள்ள அரசியல் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கே கையாளப்படுகிறதென்று கீழ்க் கையொப்பமிட்டவர்கள் அபிப்பிராயப்படுவதாலும்;

தேசத்தின் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி இவ்வடக்குமுறையை எதிர்த்து நிற்கும்பொருட்டு எல்லாக்கட்சிகளின் ஒத்துழைப்பையும் தேடுவது அத்தியாவசியமா[illegible]விட்டபடியாலும்;

கீழ்க்கண்ட திட்டத்தைஎல்லாக்கட்சிகளும், பெல்காமில் கூடவிருக்கும் காங்கிரஸும் அங்கீகரிக்குமாறு நாங்கள் பெரிதும் சிபார்சு செய்கிருேம்:—

> இதுகாறும் தேசியத் திட்டமாக இருந்து வந்த ஒத்துழையாமைத் திட்டத்தைக் காங்கிரஸ் நிறுத்திவைக்க வேண்டும். அத்திட்டத்தில், இந்தியாவுக்கு வெளியே தயாரான துணிகளை அணிய மறுப்பதாகிய அம்சம்மட்டும் நிறுத்தி வைக்கப்படமாட்டாது.
>
> மேலும், காங்கிரஸின் பற்பல வேலைகளும் அவசியமானபோது காங்கிரஸிற்குட்பட்ட வெவ்வேறு பிரிவுகளால் நடத்தப்படலாமென்றும், நூல் நூற்றல், கைநெசவு, கதர் இவைகளின் அபிவிருத்தி, சமூகங்களுக்குள் ஒற்றுமை, ஹிந்துக்களிடையே தீண்டாமை விலக்கு ஆகிய இத்திட்டம் காங்கிரஸைச் சேர்ந்த எல்லாப் பிரிவுகளாலும் நிறைவேற்றிவைக்கப்படவேண்டுமென்றும், மத்திய, மாகாணச் சட்டசபைகள் சம்பந்தமான வேலையைச் சுயராஜ்யக் கட்சியார் காங்கிரஸின் சார்பாக நடத்தி வரவேண்டுமென்றும், இவ்வேலைக்குச் சுயராஜ்யக் கட்சியார் தங்களுடைய சொந்த விதிமுறைகளை ஏற்படுத்திக்கொள்வதுடன் சொந்த நிதியும் வசூலித்து நிர்வகித்து வரவேண்டுமென்றும காங்கிரஸ் மகாசபை தீர்மானிக்கவேண்டும்.
>
> தேசமெங்கும் இராட்டினம் பரவினலன்றி இந்தியா தனக்கு வேண்டிய ஆடைகளுக்குப் பிறநாடுகளை எதிர்பாராதிருக்க முடியாதென்பது அநுபவத்தில் தெளிவாகிவிட்டபடியாலும், காங்கிரஸ்காரர்களையும் பாமர ஜனங்களையும் ஒன்று பிணைத்து அவர்களுக்குள் உண்மையான ஒற்றுமையை நிறுவக்கூடிய முறை இராட்டினத் தொழில் ஒன்றேயாதலாலும், நூல்நூற்றலையும் கதரையும் அபிவிருத்தி செய்யும் பொருட்டாகக், காங்கரஸ் அமைப்பு 7-வது விதியைப் பின் வருமாறு திருத்தியமைக்க வேண்டும்:-"பதினெட்டு வயதாகாதவர்களும், அரசியல் சம்பந்தமான கூட்டங்களுக்கு வரும்போதும், காங்கிரஸ்வேலையிலீடுபட்டிருக்கும் போதும் கைநூலால் கைத்தறியில் நெய்யப்பட்ட கதரணியாதவர்களும், தாங்களாக நூற்ருே, அல்லது, நோயினலோ, விருப்பமின்மையினலோ, மற்ற காரணத்தினலோ நூற்கமுடியாதபோது பிறரைக்கொண்டு நூற்ருே, இரண்டாயிரம் கஜம் சமனக நூற்கப்பட்ட நூல் அனுப்பாதவர்களும எந்த காங்கிரஸ் கமிட்டியிலும், காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் அங்கத்தினராக இருத்தல் கூடாது."

காந்தியடிகளுக்குக் கல்கத்தாவின் உபசாரம்

மகாத்மாவின் பதில்

இம்மாதம் 6உ மாலை கல்கத்தா நகரசபை மண்டபத்திற் கெதிரேயுள்ள மைதானத்தில் மகாத்மாவுக்கு நகரசபையின் சார்பாக உபசாரப்பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. இவ்வைபவத்தைத் தரிசிக்கும்பொருட்டு அங்குச் சுமார் ஐம்பதினயிரம் ஜனங்கள் கூடியிருந்தனர். பண்டித நேரு, ஜெயகர் முதலிய பிரபல தலைவர்களும் விஜயம் செய்திருந்தனர். அளவற்ற உற்சாகத்துக்கிடையே தேசபந்து தாஸர் உபசாரப்பத்திரத்தைப் படித்துமுடித்ததும் மகாத்மா தமது பிரசங்கத்தை முதலில் ஹிந்தியிலும் பின்னர் ஆங்கிலத்திலும் படித்தார். பிறகு எல்லா ஜனங்களுக்கும் கேட்கும் வண்ணம் ஸ்ரீமான் விபினசந்திரபாலர் அப்பிரசங்கத்தை உரத்த குரலில் வாசித்தார். மகாத்மாவின் பதில் பின் வருமாறு:—

"கல்கத்தா நகரசபையின் தலைவரே, அங்கத்தினரே, பெருமாட்டிகளே, கனவான்களே, எழுந்து நின்று பேசாதன்பொருட்டு என்னை மன்னித்திடுவீர்களாக. காரணம் தங்களுக்கு மரியாதை செய்யவேண்டுமென்னும் விருப்பமின்மையன்று, இவ்வளவு பெரிய கூட்டத்தில்எழுந்து நின்று பேசும் வலிமையின்மையேயாகும்.

தங்கள் உபசாரப்பத்திரத்தின் பொருட்டும், அதிற்கண்ட பிரிய மொழிகளின் பொருட்டும் என் மனமார்ந்த வந்தனங்களைச் செலுத்துகிறேன். அரண்மனைகளால் சிறந்து விளங்கும் இந்நகரத்தின் பெருமையை நான் அறியாதவனல்லன். நகரபரிபாலனம் சம்பந்தமான கடமைகளின் முக்கியத்தையும் அறியாதவனல்லன். அரசியல் வேலையைவிட வெளிப்பகட்டில் குறைந்ததாயினும், அரசியலைப் போல் அவ்வளவு பெருங் காரியத்தைச் சாதிக்கும் நம்பிக்கை கொண்டதன்றாயினும், அவசியத்தில் மற்றதைவிட அஃது ஒரு சிறிதும் குறைந்ததன்று. பலனிலும் அவ்வாறே. நான் ஒரு நகரசபையில் அங்கம் பெற்றால் யாது செய்வேன் என்பதைப்பற்றிப் பல முறைகளில் மனோராஜ்யம் செய்திருக்கிறேன். சில வாண்டுகளுக்கு முன்பு கல்கத்தாவிலுள்ள சந்துபொந்துகளின் வழியாக நான் நடந்தபோது, அழகும் சுகாதாரமும் பொருந்தி விளங்கிய மாளிகைகளையும், அழுக்கும் ஆபாசமும் நிரம்பிய சந்துபொந்துகளையும் ஒப்பிட்டு, நகரசபை தனது கடமைகளை நிறைவேற்றி வைக்கவில்லையென்று எண்ணினேன். நகரசபையின் வேலையை மாளிகைகளின் அழகினலன்று, சந்துபொந்துகளின் நிலைமையைக் கொண்டே மதிப்பிடவேண்டுமென நினைத்தேன். பின்னெருநாள் இந்நகரின் மாட்டுப்பண்ணைகளைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அப்பண்ணைகளின் மிகக் கேவலமான நிலைமையையும் மாட்டுக்காரர்கள் பசுக்களுக்குச் செய்யும் கொடுமையையும் கண்டு நான் நடுங்கிவிட்டேன். கல்கத்தாவில் சுகாதாரத்துக்குக்கேடான நிலைமையுள்ள விடங்களைச் சீர்திருத்தி, மாட்டுப்பண்ணைகளை நகரசபையின் மேற்பார்வையின் கீழ்கொண்டு வந்து நகரவாசிகளுக்குச் சுத்தமான பால் டலிவாசக் கிடைக்குமாறு செய்யும் வழியில் உங்களுடைய உத்தியோககாலத்தில் கூடுமானதைச் செய்து முடிப்பீர்களென்று நம்புகிறேன். ஒரு நகரசபையின் முதன்மையான கடமை, நகரவாசிகளுக்குச் சுத்தக்காற்று, தூய நீர், மலிவான சுத்தப்பால், பழம், குழந்தைகளுக்கு இலவசப்படிப்பு இவைகள் கிடைக்கும் வண்ணம் செய்வதே யென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

1818-வது வருஷத்து 3-வது ரெகுலேஷனின் கீழ் உங்களுடைய தலைமை நிர்வாக உத்தியோகஸ்தர் கைது செய்யப்பட்டிருப்பதைப் பற்றித் தாங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இவ்விஷயத்தில் எனது பூரண அநுதாபத்தைத் தெரிவிக்கிறேன். நாகரிகமுள்ளதென்று கருதப்படும் ஓர் அரசாங்கத்தின் கீழ் ஸ்ரீமான் சுபாஷ்சந்திர வஸுவைப் போன்ற ஒருவரை-எந்தமனிதரையுமே தான்—இவ்வாறு அவசரமாகக் கைது செய்து, விசாரணை நடைபெறுமென்ற நம்பிக்கைக்கு இடமின்றி - ஏன்? கைது செய்யப்பட்டதன் காரணத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்று எதிர்பார்ப்பதற்கும் வழியின்றி-வைத்திருத்தல் நினைக்கவொண்ணததாகும். அராஜக இயக்கத்தைப்பற்றி எனது அபிப்பிராயங்கள் அனைவரும் அறிந்தவையே. அவ்வியக்கத்தை நான் அடியுடன் எதிர்ப்பவன். அதனல் இந்தியாவுக்கு எத்தகைய நன்மையும் விளையாதென்று நான் நம்புகிறேன். இவ்விஷயமாக என் அபிப்பிராயத்தை விரித்துரைக்கும் தருணம் இஃதன்று. ஆனல், அராஜகச் செயல்களை நான் எவ்வளவு வெறுக்கிறேனே அவ்வளவு, அரசாங்கத்தார் கைக்கொண்டுள்ள அவசரமுறைகளையும் வெறுக்கிறேன் என்பதைமட்டும் இங்குக்கூற விரும்புகிறேன். அரசாங்கத்தார் கைக்கொண்டுள்ள முறையைச் சட்டவிரோதமான முறையென்றே கூறவேண்டும். அவர்கள் இவ்வழியிலேயே இன்னமும் செல்லாது திரும்[illegible] மு[illegible] வா[illegible]வென்றும், ஸ்ரீமா[illegible] நகரசபைக்கு மீண்டும் வந்து[illegible] யுடனும், கண்யத்துடனும்[illegible] அவர் நடத்திவந்திருக்கும் ஊழி[illegible] திரும்பவும் ஏற்றுக்கொள்வாரென்றும் நான் கொண்டுள்ள நம்பிக்கைதான் சிறிது ஆறுதலளிக்கிறது."

இருவகை அராஜகம்

மறுநாள் 7உயன்று மகாத்மாகாந்தி கல்கத்தாவைவிட்டு டில்லிக்குப் புறப்பட்டுச் சென்ருர். பிரயாணமாகுந் தறுவாயில் பத்திரிகை நிருபர் அவரைப் பேட்டிகண்டு பேசியபோது அவர் தெரிவித்ததின் சாரமாவது:— சுயராஜ்யக் கட்சியுடன் நான் செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தத்தை மாறுதல்வேண்டாக் கட்சியினர் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்வது சாத்தியமாகுமென்றும், 1920-ல் காங்கிரஸிலிருந்து விலகுவது அவசியமெனக் கருதிச் சென்றவர்கள் மீண்டும் வந்து சேர்வார்களென்றும் நம்புகிறேன். புதிய திட்டத்தின் பயனகக் கதர் உற்பத்தி அதிகமாகுமென்றும் எதிர்பார்க்கிறேன். அடக்குமுறையைப் பற்றியவரையில், இத்தருணத்தில் சட்டமறுப்புக்குத் தகுந்த நிலைமை நாட்டிலில்லாதது குறித்துப் பெரிதும் வருந்துகிறேன். சட்டமறுப்புத் தொடங்கக்கூடுமாயிருந்தால் அரசாங்கத்துக்கும், அவ்வாறே புரட்சிக்கட்சியினருக்கும் அவர்களுடைய முறைகளின் பயனற்ற தன்மையை நிரூபித்துக்காட்டி யிருக்கலாம். அரசாங்கத்தின் அடக்குமுறை, புரட்சிக் கட்சியின் பலாத்கார முறை இவ்விரண்டையும் நான் அராஜகமாகவே கருதுகிறேன். ஒரு கால் அரசாங்கத்தின் முறை மற்றதை விட அதி[illegible] அபாயகரமானதாக இருக்கலாம்-அஃது அதிக அமைப்புடன் சட்டத்தின் பெயரால் நடத்தப்படுவதாதலின். ஹிந்து முஸ்லிம்கள் சண்டையிடாதிருந்து, காங்கிரஸிற்குள்ளும் வேற்றுமை தோன்றுதிருந்திருப்பின் பலாத்கார முறைகளைவிடச் சட்டமறுப்பு எவ்வளவோ திறமையானதென்று நிரூபித்துக்காட்டியிருப்பேன்.

தாமதப்பட்ட தபால் ரிஜிஸ்டர் பார்சல்கள்

சென்ற மாதம் தீபாவளி பண்டிகைக்காக 1923ஆு செப்டம்பர் மாதத்தில், திருப்பூர் தபாலாபீஸிலிருந்து சுமத்ரா தீவிலுள்ள மைடான் டில்லி என்னுமிடத்திற்கு ஸ்ரீமான் ரா. ம. வெ. பழ. சோமசுந்திரம் செட்டியாருக்கு 50 ரூபாய் பெறுமானமுள்ள 3 கத்தர் பார்சல்கள் அனுப்பி இருந்தேன். ஷை பார்சலானது ஒருவருஷத்துக்கு மேலாகியும் இதுவரையில் அனுப்பின ஆசாமிக்காவது எனக்காவது டிலவரி செய்யப்பட இல்லை.

இதற்கிடையில் திருப்பூர் போஸ்ட்மாஸ்டருக்கும் எனக்கும் கடிதப்போக்குவாத்துகள் நடந்தன. அப்போதைக்கப்போது கேட்கும் காரணங்களுக்கெல்லாம் பதிலும் எழுதி அனுப்பி இருக்கிறேன்.

ஷை பார்சல் இவ்விடமிருந்து அனுப்பும் போது போஸ்டாபீஸில் ஷை பார்சலுக்கு தபால் கட்டணம், வசூலித்ததில் ரூபா 6-11-6 கம்மிபாய் வசூல் செய்து விட்டபடியால் ஷை தொகையும் அத்துடன் ஷை பார்சல் திரும்பி வந்த சார்ஜும் கொடுத்துவிட்டு பார்சல்களைப் பெற்றுக்கொள்ளும்படியும் தெரிவித்திருந்தார்கள். போஸ்டாபீஸில் ஏற்பட்ட தப்பிதத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் ஷை பார்சல் மைடானில் டிலவரி செய்யும்படி தகுந்த முகாந்திரம் தெரிவித்திருந்தும் யாதொரு தகவலுமில்லாமல் ஷை பார்சல்கள் திரும்பி வந்துவிட்டதால் ஷை பார்சல்களுக்குத் திரும்பிவந்த கட்டணம் கொடுக்க முடியாதென்றும் தெரிவித்து விட்டேன்.

அதற்கு பின் ஷை 6-11-6 யை பார்சல் குமாஸ்தாவிடமிருந்து வசூல் செய்யும்படி மேல் அதிகாரிகளிடமிருந்து உத்திரவு வந்துவிட்டது. இனியும் ஷை பார்சல்களை எனக்கு டிலவரி செய்ய இல்லை. அவை இப்போது திருப்பூர் தபாலாபீஸில் இருக்கிறது.

கடைசியாக 1924 ஆு நவம்பர் மீ 1உ யன்று நீலகிரி டிவிஷன் போஸ்டாபீசு சூப்பிரண்டெண்டெண்டு அவர்களுக்கு ஷை பார்சல் கூடிய சீக்கிரம் எனக்கு டிலவரி செய்யாவிட்டால் அதனல் ஏற்படும் நஷ்டத்துக்கு டிபார்ட்மெண்டு தான் ஜவாப்தாரி ஆகவேண்டுமென்று எழுதியிருந்தேன். அதற்கு ஷை விஷயம் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்கும் எக்சேஞ் போஸ்ட்மாஸ்டருக்கும் கடிதப் போக்குவரத்தில் இருப்பதாகவும் விரைவில் பைசல் செய்யப்படுமென்றும் பதில் தெரிவித்திருக்கின்றுர்கள்.

தபாலில் அவசரமாக அனுப்பப்பட்ட பார்சல்களை வருஷக்கணக்காய் தாமதப்படுத்திவிட்டபடியால் இனிமேலாவது மேல் அதிகாரிகள் கவனித்து சீக்கிரம் இவ்விஷயத்தை முடிவு செய்வார்களென நம்புகிறேன்.

மா. வெ. கருப்பண்ண செட்டி
திருப்பூர்

[illegible]தம் [illegible]

[illegible] கூறும் விவரம்

இவ்வாரத்து "எங்இந்தியா"வில் சுயராஜ்யக் கட்சியினருடன் தாம் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப்பற்றி மகாத்மா காந்தி எழுதியுள்ள நீண்ட கட்டுரையின் சாரம் பின்வருமாறு:—

என்னல் எவ்வளவு விட்டுக் கொடுப்பது சாத்தியமோ அவ்வளவும் சுயராஜ்யக்கட்சியினருக்கு விட்டுக்கொடுப்பதற்கு வேண்டிய மனேதிடம் எனக்கு அருளிய ஆண்டவனை வழுத்துகிறேன். நானும் எனது நண்பர்களும் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே நான் விட்டுக்கொடுத்திருக்கிறேன். சுயராஜ்யக் கட்சியினரும் பெரிதும் இணங்கி வந்திருக்கிருர்கள். அதன்பொருட்டு அவர்களுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன். நான் நிர்மாண திட்டத்தை முக்கியமாகக் கருதுமளவு பலர் கருதவில்லை யென்பதை யறிவேன். நூல் சந்தா ஏற்பாடு பலருக்குக் கசந்து விழுங்க வேண்டியதா யிருந்தது. ஆயினும் ஒற்றுமையை முன்னிட்டு அவர்கள் அதற்கிணங்கியது அவர்களுக்குப் பெருமையளிப்பதாகும்.

ஒப்பந்தத்தின் பலனக சுயராஜ்யக்கட்சியினர் மாறுதல் வேண்டாதவருடன் சமநிலை எய்துகின்றனர். ஒருவருடைய கொள்கைகளுக்குமாறுபடாமல் எவ்வளவு விட்டுக்கொடுக்கலாமோ அவ்வளவும் விட்டுக்கொடுப்பதுதான் அஹிம்சா தர்மம். சுயராஜ்யக்கட்சியினரின் செயல்கள் அரசாங்கத்தை ஓரளவு நிர்ப்பந்தப் படுத்தியிருக்கின்றனவென்பதை எவரும் மறக்க முடியாது. இந்த நிர்ப்பந்தத்தின் பயனைப்பற்றி அபிப்பிராய பேதம் இருக்கலாம். உறுதி, கட்டுப்பாடு, ஒற்றுமை, திண்மை முதலிய குணங்களுடன் அவர்கள் அச்சமின்றித் தங்கள் திட்டத்தை நடத்தி யிருக்கின்றனர். சட்டசபைப் பிரவேசம் நல்லதென்று ஒப்புக்கொண்டால், அவர்கள் சட்டசபைகளில் ஒரு புது உணர்ச்சியை உண்டாக்கிவிட்டார்கள் என்பதை அங்கீகரித்தேயாகவேண்டும். அவர்களுடைய வேலைத்திறமை தேசத்தின் கவனத்தைக் கவர்ந்து தேசத்தார் தங்களையே மறக்கும்படிசெய்வது என்னைப்போன்றவர்களுக்கு வருத்தமேயளிக்கும். ஆனல் நம்மில் திறமையுள்ளவர்களுள்ளோர் சட்டசபைப் பிரவேசத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் வரையில், சட்டசபைகளைக் கூடியவரையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதுதான். நான் பிடிவாதமுள்ள மாறுதல் வேண்டாதவனயிருப்பினும், அவர்களிடம் சகிப்புத்தன்மை காட்டி வேலை செய்வதுடன், கூடுமானபோதெல்லாம் அவர்களுக்குப் பலமளிக்க வேண்டுவன செய்வேன்.

ஒத்துழையாமை நிறுத்தம்

ஒத்துழையாமை நிறுத்தம் தனிப்பட்ட ஒத்துழையாதாரரை ஒரு சிறிதும் பாதிக்காது. அவர்களுக்குத் தங்களுடைய கொள்கைகளைக் கடைப்பிடிக்கப் பூரண உரிமையுண்டு என்பது மட்டுமன்று; தங்களுடைய சொந்த வாழ்க்கையில் அவர்கள் ஒத்துழையாமையைக் கைவிடுவது அவர்களுக்குச் சிறுமையையே யளிக்கும். ஒத்துழையாமையை நிறுத்தியவுடன் நான் என்னுடைய மெடல்களைத் திரும்பப் பெறுவேனென்ருவது, வக்கீல் தொழிலைத் தொடங்குவேனென்ருவது, அரசாங்கப் பள்ளிக்கூடங்களுக்கு என் குழந்தைகளை அனுப்புவேனென்ருவது எண்ண முடியுமா? ஒத்துழையாமையைத் தர்மமாகக் கொண்டவர்கள் ஒத்துழையாமையை நிறுத்திய பின்னரும் ஒத்துழையா தாரராகவே யிருப்பார்கள். ஆனல் காங்கிரஸ் கட்டளையை முன்னிட்டு மட்டும் ஒத்துழையாமையை மேற்கொண்டவர்கள் இவ்வொப்பந்தத்தின் பிரகாரம் எவ்வித அகௌரவமுமின்றி ஒத்துழையாமையைக் கைவிட்டுவிடலாம். ஒத்துழையாமை நிறுத்தம் ஒப்புக்கொள்ளப்பட்டால், பின்னர், காங்கிரஸ்காரர் எவரும் ஒத்துழையாமையைக் காங்கிரஸ் திட்டத்தின் அம்சமாகப் பிரசாரம் செய்யக் கூடாது. ஆனல் காங்கிரஸ்காரர் ஒருவர் விரும்பினல் ஒத்துழையாமை நிறுத்த காலத்தில் அதைக் கைக்கொள்ள வேண்டாமென்று பிரசாரம் செய்யலாம்.

சுயராஜ்ய சித்திக்கும், அன்னியத் துணி பகிஷ்காரத்துக்கும் இராட்டினம் இன்றியமையாதது என்று நான் கருதுவதுபோல் சுயராஜ்யக் கட்சியினர் கருதவில்லை. ஆதலின் கதரணிதலையும், நூல் சந்தாவையும் இவ்வளவேனும் அவர்கள் ஒப்புக்கொண்ட வரையில் அவர்கள் பெரிதும் விட்டுக் கொடுத்திருக்கிருர்கள் என்றே கூறவேண்டும். இதன் பொருட்டு அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். சொந்தமாக நூற்ற நூல் அனுப்பப்படவேண்டுமென்று நிர்ணயிக்கப்படாதது குறித்து அதிருப்தி யடைந்திருப்போர், பெயருக்கு மட்டுமேயிருந்த நான்கு அணச்சந்தாவிலிருந்து இவ்வேற்பாடு எவ்வளவு தூரம் என்பதைக் கவனிக்கவேண்டும். இப்புதிய சந்தாவின்படி, ஒவ்வொரு காங்கிரஸ்காரரும், இராட்டினத் தொழில் அபிவிருத்தியால் துணிசம்பந்தப்பட்ட வரையில் இந்தியா பிறநாடுகளை எதிர்பாராத நிலைமை ஏற்படுவதன் அவசியத்தில் தங்களுடைய நம்பிக்கையைப் பேச்சளவிலின்றிக் காரியத்தில் தெரிவிக்க வேண்டியவராகிருர்.

வாக்குரிமை நிபந்தனைகள்

எல்லோரும் நூல் வாங்கி அனுப்ப ஆரம்பித்து விடுவார்களென்றும், அரசியல் கூட்டங்களில் மட்டும் கதர் உபயோகிக்கப்படுமென்றும் சிலர் பயப்படுகின்றனர். ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் நூற்கவேண்டு மென்னும் கொள்கை இதுவரையில் ஒரு தனிமனிதருடைய அபிப்பிராயமாகவே இருந்துவந்ததென்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். ஆதலின் ஓரளவு மாற்றப்பட்டேனும் நூல்சந்தா திட்டம் காங்கிரஸினல் அங்கீகரிக்கப்படுவது பெரியதொரு லாபமேயாகும். இதன் பலனக நூல்நூற்பவர் கதர்நெசவு செய்வோர் இவர்களின் தொகை அதிகமாகும். மேலும், ஒன்றைப்பற்றிச் சிபார்சாகவோ, கட்டாயமாகவோ தீர்மானம் நிறைவேற்றுவதும், அதை வாக்குரிமை நிபந்தனையாக ஏற்படுத்துவதும் வெவ்வேறு விஷயங்களென்பதை நினைவிலிருத்த வேண்டும். வாக்குரிமைக்கு நிபந்தனையாக ஏற்படுத்தப்படுவது எளிதில் நிறைவேற்றப்படக் கூடியதாயிருக்க வேண்டும். நம்மில் சிறந்தவர்களுக்கே எல்லாச் சந்தர்ப்பங்களிலும், எல்லாக்காரியங்களுக்கும் கதரணிவது இயலாமற் போகலாம். ஆனல் காங்கரஸ் சம்பந்தப்பட்ட காரியங்களிலெல்லாம் கதரணிவதென்றேற்பட்டால் நம்மில் மிகப் பெரும்பான்மையோருக்கு எப்போதுமே கதரணிய வேண்டி ஏற்படும். தீவிர காங்கிரஸ்காரர் ஒருவருக்கு எந்த வைபவமும், எந்தச் சந்தர்ப்பமும் காங்கிரஸ் சம்பந்தமற்றவையாயிருக்க முடியாது. இருபத்துநான்கு மணிநேரம் சேர்ந்தாற்போல் எத்தகைய காங்கிரஸ் வேலையும் செய்யாத காங்கிரஸ்காரரை அக்கரையில்லாதவரென்றே கூறவேண்டும். காங்கிரஸ் மகாசபையில் ஆயிரக்கணக்கான அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்களில் பெரும்பான்மையோருக்குப் பல உடைகள் இருக்க முடியாது. மற்றவர்களிடமிருந்து நூல் வாங்குவதற்குப் பணமுமிராது. அவர்களே தினம் அரைமணி நேரம் நூற்றுத்தான் ஆகவேண்டும். தாம் நூல் நூற்காத காங்கிரஸ் தொண்டர் ஒருவர் பிற அங்கத்தினருக்கு நூற்பதின் அவசியத்தை அறிவுறுத்த முடியாது. ஆதலின் இத்திட்டத்தை உண்மையுடன் நடத்தி வைப்பதையே எல்லாம் பொறுத்திருக்கின்றன.

பலமான சிபார்சு

இவ்வொப்பந்தம் பெல்காம் காங்கிரஸுக்குச் செய்யப்பட்ட ஒருபலமான சிபார்சாகும். நான் என்னுடைய சொந்தப் பொறுப்பில் அதில் கையொப்பமிட்டிருக்கிறேன். தேசபந்துவும். பண்டித நேருவும் சுயராஜ்யக்கட்சியின் சார்பாகக் கையொப்பமிட்டிருக்கின்றனர். ஒப்பந்தத்தைச்சீர்தூக்கி ஆராய்ந்து குணதணங்களைப் பொறுத்து அதை ஒப்புக்கொள்ளவோ, தள்ளவோ செய்யவேண்டும். என்னுடைய சிபார்சு என்பதற்காக யாரும் எதுவும் செய்ய வேண்டாமென்று வற்புறுத்துவேன். அச்சிபார்சு நல்லதென உணர்ந்து ஒப்புக்கொள்ளப்படாவிட்டால் அரசியல் ஒற்றுமையும் ஏற்படாது; அன்னியத் துணி விலக்கும் நடைபெருது. ஒத்துழையாமை நிறுத்தம், சுயராஜ்யக் கட்சியை காங்கிரஸின் உறுப்பாக மனப்பூர்வமாய் அங்கீகரித்தல், கதரணிதலையும், தாமே நூற்ருே பிறரைக்கொண்டு நூற்ருே நூல் அனுப்புவதையும் வாக்குரிமை நிபந்தனைகளாக்குதல் ஆகிய இந்த யோசனைகள் காங்கிரஸ்காரர்களுக்கும், மற்றும் மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருப்பவர்களுக்கும் உசிதமெனத் தோன்ருவிட்டால் அவர்கள் அவற்றை நிராகரித்துத் தங்களுடைய சொந்த யோசனைகளைத் தயங்காது வற்புறுத்துவார்களாக. உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ள அபிப்பிராயங்களை எந்தக் காரணத்தை முன்னிட்டும் கைவிடுதல் தகுதியாகாது.

மங்கலம்பேட்டை சமரச சன்மார்க்கசபை

இச்சபையின் 2-வது மகாநாடு நிகழும் ரக்தாக்ஷிஆு கார்த்திகைமீ 7,8உ (22, 23—11—24) சனி, ஞாயிறுகளில் சென்னை "நவசக்தி" பத்திராசிரியர் ஸ்ரீமத் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் மங்கலம்பேட்டையில் நடைபெறும். அதுகாலை திருமுதுகுன்றம் குமாரதேவ மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிதம்பரஸ்வாமியார் அவர்கள், கோவல் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்கள் முதலிய பல பெரியோர்களால் சன்மார்க்க சம்பந்தமான பல அரியவிஷயங்களைப்பற்றி உபந்நியசிக்கப்படும்.

சீனத்தில் தாஞ்சி ஜியூ என்னும் புதிய போர்த்தலைவன் ஒருவன் கிளம்பப்போவதாக ஒரு செய்தி கூறுகிறது.

தமிழ் நாடு

திருவண்ணமலையில் தமிழர் மகாநாட்டையொட்டி நடைபெறவிருக்கும் கதர் கண்காட்சியைத் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மையார் திறந்துவைப்பார்.

* * *

மயிலாப்பூர் வித்வத்சிரோமணி மண்டலத்தின் ஆதரவில் 29-10-24-ல் ஒரு கூட்டம் கூடி, சமஸ்கிருதத்தில் அபிவிருத்தியைப் பற்றிச் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக ஒரு நிருபர் தெரிவிக்கிருர்.

* * *

அடுத்த டிசம்பர்மாதத்திலிருந்து நூல் சந்தா அனுப்புவோர் 10உக்குள் திருப்பூருக்கு அனுப்பிவிடவேண்டு மென்றும், அதற்குப் பின்னல் அனுப்புவோரின் சந்தா மறுமாதத்திற்கே வரவு வைத்துக்கொள்ளப்படு மென்றும் கதர்போர்டு காரியதரிசி ஸ்ரீமான் சந்தானம் எழுதுகிருர்.

* * *

அடுத்த ஆண்டிற்கு சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர். ஸ்ரீமான் ஆதிகேசவ நாயக்கர், ஜனப் அஹமத்கான் இவ்விருவரும் காரியதரிசிகளாகவும், ஸ்ரீமான் சுரேந்திரநாத் ஆரியா பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்.

* * *

காங்கிரஸ் என்பதே இன்னதெனத் தெரியாதிருந்த திண்டுக்கல் தாலூக்கா சித்தையன் கோட்டையில் ஸ்ரீமான். கு. பழனிச்சாமி செட்டியார் அவர்களின் நன்முயற்சியால் கதர்க் கடை ஒன்று ஏற்படுத்திச் சென்ற தீபாவளியன்று சுமார் 500 ரூபாய் கதர் வரையும் விற்பனையாகியிருக்கிறது. தற்காலம் அவ்வூர் பொது ஜனங்களுக்கேற்பட்டிருக்கும் தேசபக்திக்கும், அவ்வூரில் காங்கிரஸ் மகாசபையேற்படுத்தத் தீவிர முயற்சி யெடுத்துக்கொண்டிருக்கும் ஸ்ரீமான் கு. பழனிச்சாமி செட்டியார் அவர்களுக்கும் என் வந்தனத்தைச் செலுத்துகிறேன் என்று சாத்தா கோவில் பட்டி கிராமகாங்கிரஸ் காரியதரிசி தெரிவிக்கிருர்.

* * *

அரந்தாங்கியில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் அரந்தாங்கி சர்வஜன சகாய கதர்வர்த்தக சங்கம் என்ற நாமத்துடன் ஓர் சங்கம் ஏற்பட்டுப் பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் பங்கு சேர்க்கிறதென்றும், அதில் சேரும் தொகையைக்கொண்டு பஞ்சு வாங்கி நூற்கக் கொடுத்து நூலை வாங்கித் தறிபோட்டு கதர் அபிவிருத்தி செய்கிறதென்றும், ஸ்ரீமான் நா. வீரப்பபிள்ளை அக்கிராசனத்தின் கீழ் 6 பேர் கொண்டதொரு காரியக்கமிட்டி ஏற்படுத்தி வேலை செய்துவருகிறதென்றும் தீர்மானிக்கப்பட்டன. உடனே 20 பங்குகள் வரை அவ்விடத்திலேயே சேர்ந்தன. இன்னும் அநேகர் பல பங்குகளை எடுத்துக்கொள்வார்களென்று நம்பப்படுகிறது என்று ஒரு நிருபர் எழுதுகிருர்.

* * *

சென்னைச் சட்டசபைக் கூட்டம் இம்மாதம் 12உ ஆரம்பமாயிற்று. நீர்ப்பாசன மசோதாவைப்பற்றி விவாதம் நடந்து வருகிறது. பரிசிலனைக்கமிட்டிகளின் நடவடிக்கைகளைச் சென்னைப் பத்திரிகைகள் பிரசுரித்ததன் சம்பந்தமாக 13உ யன்று கூட்டத்தில் அக்கிராசனர் ஓர் அறிக்கையை ஆஜர் செய்தார். "நியூ இந்தியா," "சுயராஜ்யா" "ஹிந்து" முதலிய பத்திரிகைகள் இனி பரிசிலனைக் கமிட்டி நடவடிக்கைகளைப் பிரசுரிப்பதில்லை யென்ற உறுதி கூறி பதிலனுப்பியிருந்தன. "மெட்ராஸ்" மெயில்மட்டும் அவ்வாறு வாக்குறுதியளிக்க முடியாதென்று பதிலளித்திருந்தது. மெட்ராஸ் மெயிலுக்குத் தகுந்த பாடங் கற்பிக்க வேண்டுமென்று சில அங்கத்தினர் ஆத்திரத்துடன் பேசினர்கள்.

தமிழ் நாட்டில் ஹிந்தி பிரசாரம்

1923-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து 1924-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முடியத் தமிழ்நாட்டில் நடந்திருக்கும் ஹிந்தி பிரசார வேலையைப்பற்றிய ஓர் அறிக்கை வரப்பெற்ருேம். தமிழ்நாட்டார் ஹிந்தி பிரசார வேலைக்குப் போதிய பொருளுதவி செய்யவில்லை யென்றும், அதன் பலனக எதிர்பார்க்கக் கூடியவளவு அவ்வியக்கம் அபிவிருத்தி யடையவில்லை யென்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சென்ற வருஷத்தில் பதினன்கு வெவ்வேறிடங்களில் பதினைந்து ஹிந்தி பிரசாரகர்கள் தொண்டியற்றி வந்ததாகவும், சுமார் ஆயிரம் தமிழர்கள் ஹிந்தி கற்றுக்கொண்டதாகவும் தெரியவருகின்றன.

வெளி நா[illegible]

[illegible]ப்பட்டப் போ[illegible] [illegible]ர்கள் அறிவ[illegible] [illegible]ற்கு இரா[illegible] [illegible]க்கமாட்டார் [illegible]ன் நிருபர் [illegible]ன்

[illegible]ஸ்பெ[illegible]ன் தேசத்தில் புரட்சி இயக்கத்திலீடுபட்ட சம்பந்[illegible]ட்ட பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். [illegible] ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டிருக்கி[illegible]ன.

* * *

பாரசீ[illegible]த்தில் அரசாங்கத்துக்கு விரோதமாகக் கி[illegible]ம்பி யிருந்த கலகக்காரர்களின் துருப்புகள் அரசாங்கத் துருப்புகளால் முறியடிக்கப்பட்டன வென்று தெரியவருகிறது.

* * *

சீனதேசத்தில் பெகிங்கில் ஏற்பட்டுள்ள புதிய அரசாங்கத்தார் பெயரளவில் சீனச் சக்கரவர்த்தியாயுள்ள ஹுஸுன் டங் என்னும் சிறுவரைப் பாதுகாப்பில் வைத்திருக்கின்றனர்.

* * *

வெம்பிளியில் நடைபெற்ற பொருட்காட்சிக்கு லண்டனிலிருந்து புறப்படும் வண்டிகள் 1 கோடியே 15 லட்சம் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு சென்றனவாம். தினம் 650 ஸ்பெஷல் வண்டிகள் வீதம் மொத்தம் 1,07,250 ஸ்பெஷல் வண்டிகள் விடப்பட்டனவாம்.

* * *

அங்கோராவில் கெமல்பாட்சாவின் அரசாங்கம் ஏற்பட்டதினத்திற்குப் பின்னர் கட்சி வேற்றுமை இப்போதுதான் முதன் முதலாகத் தோன்றியிருக்கிறது. சென்ற ஞாயிற்றுக்கிழமை அங்கோரா பிரதிநிதி சபையில் பதினெட்டு அங்கத்தினர் அரசாங்கத்துக்கு விரோதமாக வாக்களித்ததுடன் 'ஜனங்கள் கட்சி'யிலிருந்து பிரிந்து 'குடியரசுக் கட்சி' என்ற பெயருடன் தனிக்கட்சியை அமைத்துக்கொண்டிருக்கின்றனர்.

* * *

இதாலியா நாட்டில் தற்போது அதிகாரம் வகித்துவரும் பாஸிஸ்ட் கட்சியினருக்கு எதிர்க்கட்சியார் பார்லிமெண்டில் ஆஜராக மறுத்துவிட்டனர். அவர்கள் தேசத்திற்கு விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் தாங்களே தேச ஜனங்களில் பெரும்பான்மையோரின் பிரதிநிதிகளென்றும், சிறுபான்மையோரான பாஸிஸ்ட் கட்சியார் சட்டவிரோதமான முறையில் அதிகாரம் வகித்துவருகிருர்களென்றும் குறிப்பிட்டிருக்கின்றனர். இதாலிய அரசியலில் நெருக்கடியான நிலைமை ஏற்படலாமென்று தெரியவருகிறது.

* * *

இந்தியக் குதிரைப் படையைச்சேர்ந்த மூன்று ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கையில் கப்பலில் ஒருவயது முதிர்ந்த கனவான் சீட்டுவிளையாடத் தம்மை யாரும் சேர்த்துக்கொள்ளவில்லை யென்று பெரிதும் வருத்தப்பட்டாராம். மேற்சொன்ன மூவரும் அவருடன் சீட்டாடச் சம்மதித்துப் பிரயாணம் முழுவதும் அந்நால்வரும் விளையாடிக்கொண்டு வந்தனர். சிலகாலம் கழித்த பின்னர் மேற்படி கனவான் காலஞ் சென்ருர். அவருடைய மரணத்தறுவாயில் வருஷம் இருபதினயிரம் ரூபா வருமானமுள்ள தமது சொத்துக்களைத் தங்களுக்கு எழுதிவைத்துச் சென்றதாக மேற்படி இளைஞர்கள் அறிந்து ஆச்சரியமடைந்தனர் என்று "நியூஸ் ஆப்தி வொர்ல்ட்" என்னும் பத்திரிகை கூறுகிறது.

அடையாற்றில் இராட்டினம்

"சுயராஜ்யா" பத்திரிகையின் அடையாறு நிருபர் அப்பத்திரிகைக்கு எழுதியிருப்பதாவது:—

டாக்டர் பெசண்டும் அவருடைய கட்சியும் இவ்வாண்டு காங்கிரஸிற்குச் செல்லத் தீர்மானித்து விட்டனர். திவ்யஞான சங்கத்தின் வருஷாந்தக்கூட்டம் பம்பாயில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு வருவோர் பெல்காமுக்குச் செல்வது சௌகரியமாகும்படியாகக் கூட்டத்தின் தேதி குறிப்பிடப்படும். அடையாற்றில் இராட்டினத்துக்கு முக்கியமானஸ்தானம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்க மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. தற்போது அடையாற்றில் வசிக்கும் பிரான்ஸு தேசத்தினராகிய மான்வியார்லி என்னும் மாதரார் இங்கு முதன்முதலாக நூல்நூற்க ஆரம்பித்தார். அவருடைய முயற்சியினல் இப்போது அடையாறு வாசிகளில் பலர் தவருது நூல்நூற்று வருகின்றனர். அடுத்தமாதத்தில் மகாத்மாவின மூலமாகக் காங்கிரஸுக்கு நூல்சந்தா அனுப்பலாமென்று அடையாறு வாசிகள் எதிர்பார்க்கின்றனர். இம்மாதம் வெளியான 'தியாஸபிஸ்ட்' என்னும் திவ்யஞான சங்கத்தின் பத்திரிகையில் டாக்டர் பெசண்டு அடையாற்றில் நூல் நூற்றல் அபிவிருத்தி யடைந்துவருவதைப்பற்றிக் குறிப்பிட்டு, ஸ்ரீமதி மான்வியார்லியின் சிறந்த முறையைப் பாராட்டியிருப்பதுடன் எல்லா கிராமங்களிலும் இராட்டினம் பரவ வேண்டுமென்று தாம் விரும்புவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.



நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம் நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம், ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம் இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை, தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற், கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.—(அப்பர்.)

சென்னை 1924ஆம் ௵ நவம்பர்மீ 14௳.

முதலமைச்சர் முழக்கம்.

இலண்டன் நகரபரிபாலன சங்கத் தலைவர் நடாத்திய உண்டாட்டில் பிரிட்டிஷ் முதலமைச்சர் ஸ்ரீபால்ட்வின் நமது இந்தியாவைப்பற்றிப் பெருமுழக்கஞ் செய்தார். ஸ்ரீபால்ட்வின் இந்தியாவைப்பற்றி என்ன பேசினும் பேசுக. ஆனால் இந்தியாவின் உண்மை நிலை உணர்ந்து அவர் பேசினரா என்று நாம் கடாவுகிறோம். இந்தியாவில் உயர்பதவி வகித்துள்ள உத்தியோகஸ்தர்களே இந்தியாவின் உண்மைநிலை தெரியப்பெறுது விரும்பத்தகாத வினைகளாற்றுகிறார்களெனில், ஆறாயிரம் மைல் தூரத்திலுள்ள ஸ்ரீபால்ட்வினுக்கு இந்தியாவைப்பற்றி என்ன தெரியும்?

லார்ட் கர்ஸன் இந்திய மக்கள் மனநிலை உணராது வங்காளப் பிரிவு செய்தார். பின்னைப் பெருங்கூச்சலும் சந்தடியுங்கிளர்ச்சியுங் குழப்பமும் கலகமுமெழுந்தன. இந்தியரை இத்துன்பவருத்தத்துக்குட்படுத்தி வங்காளப் பிரிவு தொலைந்தது. லார்ட் செம்ஸ்பர்ட் பலர் மறுப்புக்கிடையே பொல்லாத ரௌலட் சட்டத்தை நிறைவேற்றினர். அச்சட்டம் என்ன வினை நிகழ்த்திற்று? வட்டளவிலிருந்து இறந்துபட்டது. இந்தியாவின் நிலையை லார்ட் செம்ஸ்பர்ட் உண்மையில் உணர்ந்திருந்தாராயின் அச்சட்ட நிறைவேற்றலுக்கிசைந்திருக்கமாட்டார். அக்கொடுஞ் சட்ட நிறைவேற்றமன்றோ பஞ்சாப் படுகொலைக்கு மூலகாரணமாக நின்றது? அஃதின்னும் இந்தியாவைத் தட்டியெழுப்பிக்கொண்டேயிருக்கிறது. ரௌலட் சட்டம் நிறைவேறாதிருப்பின் பஞ்சாப் படுகொலையேது? தேச நிலையுணராது அதிகாரிகள் ஆற்றும் சிறுமைச் செயல்கள் தேசத்தைப் பின்னைப் பல்வழியிலும் வருத்துகின்றன.

இப்பொழுது லார்ட்ரெடிங் வங்காள அவசரச்சட்டம் பிறப்பித்துள்ளார். இவரும் உண்மைநிலை தெரியாது அச்சட்டத்தை யாக்கியுள்ளார். அச்சட்டத்துக்கு முதல் அமைச்சர் ஆதி கூறுகிறார். வங்காளப் பிரிவால் விளைந்ததையும், ரௌலட் சட்ட நிறை வேற்றத்தால் விளைந்ததையும் பால்ட்வின் சிந்தியாது அவசரச் சட்டத்தை ஆதரிக்கிறார். தேச மக்கள் மனநிலையுணரும் ஆற்றலில்லாத ஓர் ஆட்சிமுறை இந்தியாவில் நடைபெறுகிறது!

ஸ்ரீ பால்ட்வின் தேர்தலில் தஞ்சார்பினர் பெற்ற வெற்றிக்களிப்பாலும், உண்டாட்டத்தின் அபர்வாலும் பேசிய பேச்சுக்கள் இந்தியாவை யொன்றுஞ் செய்யா. ஸ்ரீ பால்டுவின் இந்தியாவைப்பற்றி எவ்வளவு தெரிந்துகொண்டிருக்கிறாரென்பதை அறிய விரும்புகிறோம். இந்தியா, உலகத்துக்கு நாகரிக மளித்த தேசம் என்பது பால்ட்வினுக்குத் தெரியுமா? பிரிட்டிஷார் ஆடையணியப் பயிலாக்காலத்து இந்தியாவில் கலைவாணரும் கவியரசரும், சிற்பவினைஞரும், அறவோரும் உறைந்தது முதலமைச்சருக்குத் தெரியுமா? இராஜாசாஹப் சேனைவெள்ளத்திடை லார்ட்கிளைவும், சில பிரிட்டிஷ் போர் வீரரும் மூழ்கி விழித்தபோது, இந்திய மக்கள் தாங்கள் கஞ்சிநீர்குடித்துத் துணைபுரிந்தது கன்ஸர்வேடிவ் தலைவருக்குத் தெரியுமா? இவைகளெல்லாம் பழைய சரித்திரம். இவை பால்டுவினுக்குத் தெரியாமலிருக்கலாம். ஐரோப்பா யுத்தத்தில் பிரிட்டிஷாருக்கு உறுதுணை செய்ததேசம் இந்தியாவென்பது ஸ்ரீ பால்டுவினுக்குத் தெரியுமன்றோ? பிரிட்டிஷாருக்கு ஒரு வழியிலல்லாது பலவழியிலும் வளத்தையுஞ் செல்வத்தையும் நல்கிவரும் இந்தியாவில் ரௌலட் சட்டத்தையும் பஞ்சாப் படுகொலையையும் அவசரச்சட்டத்தையும் புகவிடுவதைப் பிரிட்டிஷ் அமைச்சர் ஆதரித்துப் பேசுவது அறக்கடவுளுக்கு ஏற்குமோ?

ஸ்ரீ பால்டுவின் இந்தியாவில் ஹிந்து முஸ்லீம் வேற்றுமை நிகழ்ச்சி மிக உரமாக விருக்கிறதென்றும், அத்தகைய நிகழ்ச்சி எந்நாளும் உறவில்லையென்றும், அதற்குக் காரணம் இந்தியாவிலுள்ள தீவிர தேசிய வாதிகள் சீர்திருத்தத்தைக் குலைக்கப் புகுந்தமையென்றும், தற்கால நிலை இராஜப்பிரதிநிதியை அவசரச் சட்டஞ்செய்யுமாறு தூண்டிற்று என்றும், அவர் செயலுக்கு அரசாங்கம் ஆதரவளிக்குமென்றும் பேசி, நியாயவரம்புக்கு உட்பட்ட இந்தியர்கள் ஒத்துழைப்புத் தேவையென்று கூறியிருக்கிறார்.

ஹிந்து முஸ்லீம் வேற்றுமை நிகழ்ச்சிக்கு உண்மைக்காரணம் விரைவில் சில காலத்துக்குள் வெளியாகாமற்போகாது. ஹிந்துக்கள் முஸ்லீம்கள் எனப்படும் வகுப்பார்க்கு எவ்வழியிலும் துவேஷம் நிகழவில்லை என்பது நிச்சயம். ஹிந்துமுஸ்லீம் ஒற்றுமைக்குக் கேடு சூழ்ந்து தாம் உயர் பதவியில் வர வேண்டுமென்ற நோக்கமுடைய ஒரு சிலர், ஏழை மக்களைத் தூண்டிப் பெருங் கலகம் விளைந்து வருகின்றாரென்பதாம் கேள்விப்படுகிறோம். ஹிந்து முஸ்லீம் வேற்றுமைகளைய அரசாங்கத்தார்க்குக் கவலையிருப்பது உண்மையானால், அவர், மலையாளக் குழப்பத்தின்போது மௌலானா யாகப் ஹாசன் அவண் செல்ல விரும்பியதற்கு இசையாததும், கோஹத்துக்குக் காந்தியடிகள் செல்ல விரும்பிக் கேட்டதற்கு இணங்காததும் எதற்கு? தேசத் தலைவர்கள் விருப்பத்துக்கிணங்க அரசாங்கத்தார் மறுத்து வருமட்டும், அவர் செயல்கள் ஐயத்துக்குரியனவேயாகும்.

ஹிந்து முஸ்லீம் வேற்றுமைக்கும் திவிரக்கட்சியார் சீர்திருத்தத்தை அழிக்க முயலுவதற்கும் என்ன தொடர்பிருக்கிறதோ தெரியவில்லை. திவிரக்கட்சியார் ஒத்துழைக்க மறுப்பதால் முஸ்லீம்கள் மனம் 'புண்பட்டுக் கலாம் விளைக்கிறார் என்பது பால்டுவின் கருத்தோ? ஒத்துழையா எழுச்சிக்கு ஒரு காரணமாக நின்றது கிலாபத்துக்கு நியாயம் பிறவாமையென்பது பால்ட்வினுக்குத் தெரிந்திருக்குமென்றே நம்புகிறோம். அலி சகோதரர்கள், மௌலானா அபுல்கலாம், மௌலானா யாகப்ஹாசன் முதலிய முஸ்லீம் தலைவர்கள் ஒத்துழையாமையிற் சேர்ந்து சிறைபுகுந்தவர்களல்லவோ? ஆறாயிரம் மைல் தூரத்திலுள்ள பால்ட்வின், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுகிறார்.

இராஜப் பிரதிநிதி ஆக்கியுள்ள அவசரச் சட்டத்துக்கு ஆதரவளிப்பதாக ஸ்ரீ பால்ட்வின் வீறிடுகிறார். தாராளமாக ஆதரவளிக்க. தொழிலரசாட்சியே அச்சட்டத்துக்கு ஆதரவளித்ததெனில், பால்ட்வின் அரசாட்சி அதற்கு ஆதரவளிப்பதில் என்ன வியப்பு? அவசரச்சட்டத்துக்கு இரையாகியுள்ள இந்தியமக்கள் கொலை கொள்ளைக் கூட்டத்திற் சேர்ந்தவரல்லரென்பது பால்ட்வினுக்கு எப்பொழுது தெரியவரும்? கொலை கொள்ளையென்று நகரபரிபாலன நிருவாகியையும், காங்கரஸ்சபைக் காரிய தரிசியையும், சுயராஜ்யக்கட்சிக் காரிய தரிசியையும் பிடித்திருப்பது எந்த நியாயமோ தெரியவில்லை. கொலையும் கொள்ளையுந் துஷ்டர்களால் நிகழ்த்தப்படுதலியல்பே. அவர்களை அடக்க எத்தனையோ சட்டங்களிருக்கின்றன. பிறந்த அவசரச் சட்டமும் துஷ்டர்களை விழுங்கக் காணோம். கற்றவர்களை - தேசபக்தர்களை - அஹிம்சா தர்மத்தில் உறுதியுடையவர்களை அச்சட்டம் பிடித்திருக்கிறது.

இவ்வுண்மை யுணராத பால்ட்வின் ஒத்துழைக்க இந்தியர்களை அழைக்கிறார். இந்தியரென்றால் ஸ்ரீ பால்ட்வின் எவரைக் கொண்டுள்ளார்? ஒரு சீநிவாச சாஸ்திரி, ஒரு சிவசாமி ஐயர், ஒரு பசுலுல் ஹக்கையா? அல்லது டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் போன்றவரையா? பால்ட்வின் உண்மை நிலைமை யுணராது உளறியிருக்கிறார். முதலமைச்சர் பதவியிலுள்ள ஒருவர் உண்மை கண்டு இந்தியா வேண்டுவதைச் செய்யாது அடக்குமுறையை ஆதரிக்க முன்வருவது அறிவுடைமையாகாது.

பிரிட்டிஷாருக்கு இடங்தந்த இந்தியாவை, நூற்றைம்பது வருடமாகத்தன் நிலை கலை வளம் எல்லா மிழந்துவரும் இந்தியாவை, பிரிட்டனுக்கு வாழ்வையளித்துவரும் இந்தியாவை, ஏகாதிபத்தியத்துக்கு நடுநாயகமாக விளங்கும் இந்தியாவை அடக்கக்கிளம்பும் முறைகளைப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஆதரிக்க முன் வருவது நியாயமா தருமமாஎன்று கேட்கிறோம்.

பதிலென்ன?

நியாயமணி லார்ட்ரேடிங் அவசரச் சட்டத்துக்கும், முதல் அமைச்சர் முழக்கத்துக்கும் பதிலிறுத்தல்வேண்டும். எவ்வழியில் எம்முறையில் பதிலிறுப்பது? அஹிம்சாதர்ம ஒத்துழையா வழியில் சட்டமறுப்பு முறையில் பதிலிறுத்தல் வேண்டும். இப்பொழுது ஒத்துழையா இயக்கம் எந்நிலையிலிருக்கிறது? சட்ட மறுப்புச் செய்ய இயலுமோ? என்பது கவனிக்கப்படல் வேண்டும். சட்ட மறுப்புக்கு ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையும், தீண்டாமை விலக்கும், அரசியல் கட்சிகளின் ஒற்றுமையும் இன்றியமையாதன. இவையாவும் இப்பொழுது சிதைவுபட்டிருக்கின்றன. என் செய்வது?

ரௌலட் சட்டத்தையழிக்கச் சத்தியாக்கிரகத்தைக் கிளப்பிய நமது மகாத்மாகாந்தி, அவசரச்சட்டத்தின் எழுச்சியையொடுக்க என்னசெய்தார்? "சட்ட மறுப்பைத் தொடங்கி யிருப்பேன். தேச நிலை கால நிலை ஒழுங்காயில்லை" என்று கூறிச் சுயராஜ்யக் கட்சித் தலைவர்களோடு கலந்து ஓர் அறிக்கைக் பிறப்பித்துள்ளார். அவ்வறிக்கையின் சுருக்கம் மற்றோரிடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. தற்போதைய தேச நிலையை யுன்னும்போது அதைவிட வேறொன்றும் எவராலுஞ் செய்ய இயலாதென்றே தோன்றுகிறது. இதைப்பற்றி மகாத்மாகாந்தி "எங் இந்தியா"வில் நீண்டதொரு கட்டுரை வரைந்துள்ளார். அதை நேயர்கள் ஊன்றிப்படிப்பார்களாக.

தேசநிலை காலநிலை யுணராது "காந்தியடிகள் விட்டுக்கொடுத்தார்" என்று வாய் கூசாது சொல்லுதல் மிக எளிது. சேனைவீரர்கள் கோணி நிற்கும்போது சேனைபதி என்ன செய்வார்? அவசரச் சட்டமொன்றுங் திடீரெனக் கிளம்பித் தாண்டவம் புரிகிறது. அதற்கும் பதிலிறுத்தல் வேண்டும். ஒற்றுமை... யாதது. ஒற்றுமைக்கு... தோன்றியுள்ள பிளவு... வது ஒழிதல்வேண்டும். அ... மாறுதல் வேண்டுவோர் வேண்டாதார் இருவரும் இணங்கல்வேண்டும். 'மாறுதல் வேண்டாதாராவது விட்டுக் கொடுக்குந் தருமத்தைக் கையாளல் வேண்டும்; அல்லது மாறுதல் வேண்டுவோராவது அதற்கு உடன்படல் வேண்டும். ஒரு பொதுக் காரியத்தில் ஒற்றுமை நாடியோ வேறு நலன் நாடியோ வேற்றுமைக்கு அடிப்படையாக நிற்கும் முரண்பாடுகளை யொழித்து ஒருவர்பால் மற்றொருவர் சரண்புகுந்தாலன்றித் தொடங்கப்பட்ட பொதுக் காரியம் நிறைவேறாது. ஒற்றுமை நாடியும் பிறர்நலங் குறித்தும் கட்சியை வலியுறுத்தாது விட்டுக்கொடுப்பது போன்ற தியாகத்தினுஞ் சிறந்த தியாகம் வேறொன்றிருப்பதாகத் தெரியவில்லை.

இத்தருமம் மாற்றாரோடு அநுஷ்டிக்கப்படலாகாதென்பதும், ஒரு நாட்டின் நலன் கருதித் தத்தம் அறிவிற்குத் தோன்றுமாறு கட்சிகளை வகுத்துக் கரும மாற்றுவோர் பால் காலநிலை யுணர்ந்து ஒற்றுமை நாடி அநுஷ்டிப்பதென்பதும் ஈண்டுக் கவனிக்கற்பாலன.

இப்பொழுது மகாத்மா காந்தியார் தமது கட்சியை வலியுறுத்தாது விடல் வேண்டும் அல்லது தேசபந்துதாஸ ராதல் விட்டுக்கொடுத்தல் வேண்டும். முன்னவர் வழி பின்னர் நின்றால் மாறுதல் வேண்டாக்கட்சி ஆக்கமுறும்; இவர் வழி அவர் நின்றால் மாறுதல் வேண்டிய சுயராஜ்யக்கட்சி ஆக்கமுறும். இவ்வேளையில் அடக்குமுறையால் பீடிக்கப்பட்டிருப்போர் சுயராஜ்யக்கட்சியாராகலான் அவர்க்கு ஊக்கமூட்டவேண்டி மகாத்மாகாந்தி அறிக்கையில் கைச்சாத்திட்டார். தேசபந்து தாஸர் மகாத்மா வழியிணங்கிப் பழையபடி போர் தொடங்க முந்தியிருந்தால் கலக்கருவாகும். அவர் தம் வழியால் நலம் விளையுமென்று உறுதிகொண்டிருத்தலால் வேற்றுமை முரண்களைய மகாத்மாவே இணங்கினர்; "யங் இந்தியா" விலும் "நான் சரண்புகுந்தேன்" என்று விளக்கமாக எழுதியிருக்கிறார்.

மாறுதல் வேண்டாதார் அவ்வறிக்கையை கொள்ளுவதா தள்ளுவதா என்பது கவனிக்கற்பாற்று. கதர் பரவுதற்கு இடையூறுகவுள்ள பகுதி தவிர மற்ற பகுதிகளுக்கு மாறுதல் வேண்டாதார் இணங்கலாமென்றே நாம் கூறுவோம். இப்பொழுது காங்கரஸில் இரண்டு பிளவிருத்தலால் ஒரு கருமமும் செவ்வனே நிகழ்வதில்லை. எப்பொழுது ஒரு கூட்டத்தார் சட்டசபை நுழைந்தாரோ அப்பொழுதே ஒத்துழையாமையின் உயிராக உள்ள பகிஷ்கார எழுச்சி குன்றிற்று. பகிஷ்கார திட்டம் அநுஷ்டானத்தில் அறவே யில்லை என்பது வெள்ளிடைமலை.

மாறுதல் வேண்டாதார் முன்னே இப்பொழுது அநுஷ்டானத்துக்கு நிற்பது நிர்மாண திட்டமொன்றே. அதை ஒழுங்குபெற நடாத்துவதில் அன்னார் கண்ணுங் கருத்துமாயிருத்தல் வேண்டும். அத்திட்டத்தை எல்லாக் கட்சியார்க்குமுரிய திட்டமாக்கவேண்டுமென்பதுமகாத்மாவின் விருப்பம். அதன் பொருட்டு முரண்பாடுகளைக் களைய மகாத்மா முன் வந்துள்ளார். நிர்மாண திட்டம் எல்லாக் கட்சியாராலும் ஏற்றுக் கொள்ளப்படுவது பின்னைப் பகிஷ்காரத் திட்டத்துக்கு ஆக்கந் தேடுவதாகும். சட்டசபை புகும் எந்தக் கட்சியாராலும், அதன் வாயிலாகவாவது, அதைத் தகர்த்தாவது ஒன்றுஞ் செய்ய முடியாது. அப்பித்துடையோர் அப்பித்தொழியுமட்டும் அவர் தம்வழியுழன்று சுசுத்து திரும்புவர் என்பது நிச்சயம். அதற்கு மாறுதல் வேண்டாதார் பொறுமை தேவை. "எமது முயற்சிக்கு மாறுதல் வேண்டாதார் குறுக்கே நின்று கேடு விளைத்தார்" என்று பெயரை மாறுதல்வேண்டாதார் பெறுதிருப்பாராக. இக்காரணம் பற்றி ஒத்துழையாமையைநிறுத்த ... திருத்தப்படின் காங்கிரஸிலிருந்துள்ள மற்றக்கட்சியாரும் இனி காங்கரஸில் சேரும் எல்லாக் கட்சியாரும் நிர்மாண திட்டத்தை ஆதரிக்கக் கடமைப்படும் நிலை நேர்கிறது. ஆகவே நிர்மாணதிட்டம் முன்னையினும் மிகச்சிறப்பாக ஆக்கமுற்று வளரும். வேற்றுமைக்கு இடந்தரும் பகிஷ்காரம் மறைவதாலும் பல கட்சியார் ஒற்றுமையாலும் நிர்மாண திட்டம் ஆட்சிபெறும். எல்லாக் கட்சியாராலும் நிர்மாண திட்டம் ஆக்கம்பெற்று ஒருபால் வளர்ந்துவர மற்றொரு பால் சட்டசபை செல்வோர் 'ஆங்கே ஒன்றுஞ் செய்ய முடியவில்லையே' என்ற கைப்பு வளர்ந்துவர-இரண்டுஞ் சேர்ந்து ஒத்துழையாமையை யுயிர்ப்பிக்குமென்று எதிர்பார்க்கலாம். காந்தியடிகள் அறிக்கையில் கைச்சாத்திட்டதன் நோக்கமே ஒத்துழையாமையை வளம்படுத்தும் நோக்கமாயிருக்கலாமென ஊகிக்கவுமிடமுண்டு.

நாளைமுதல் திருவண்ணாமலையில் கூடப்போகும் தமிழ் மகாநாடு, காந்தியடிகளும் தேசபந்து தாஸரும் பண்டித மோதிலால் நேருவும் வெளியிட்டுள்ள அறிக்கையில் கதரைப்பற்றிய குறிப்புக்களில் சில மாறுதல் செய்து அதை ஆதரிக்குமென்று நம்புகிறோம். அவ்வாதரவு அதிகார வர்க்கத்துக்குச் செவ்வனிறையிறுப்பதோடு ஒற்றுமை நாடிப்பின்னை ஒத்துழையாமைக்கு மீண்டும் புத்துயிர் நல்கக் காந்தியடிகளுக்குத் துணை புரிவதாகும்.

தீண்டாமை

வைக்கத்துப் போர் நிற்கவில்லை. சத்தியாக்கிரகிகளின் தியாகத்தைக் கண்டு இன்னும் ஜாதி ஹிந்துக்களின் மனம் இரங்கவில்லை. திருவாங்கூரிலுள்ள எல்லாப் பொதுச்சாலைகளிலும் தீண்டாதார் உள்பட அனைவருக்கும் ஒரேவிதமான உரிமை இருக்கவேண்டுமென்று கருத்தடங்கிய ஒரு மகஜரை, திருவாங்கூர் மகாராணியாரிடம் சமர்ப்பிக்க ஜாதி ஹிந்துக்களடங்கிய ஜதைகள் வைக்கத்தினின்றும் நாகர்கோயிலினின்றும் புறப்பட்டுத் திருவாங்கூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்ததை நேயர்கள் அறிவார்கள். இந்த ஜதைகள் திருவாங்கூரை அடைந்து விட்டன. இவை புறப்பட்ட இடத்திலிருந்து சேரும் இடம் வரையில் வழியில் உள்ள பல இடங்களிலும் அனைவராலும் உபசரிக்கப்பட்டன. ஜனங்கள், இவர்களுடைய நோக்கத்தில் ஆதரவு காட்டியதுடன் இவர் முயற்சி வெற்றிபெற வேண்டுமென்று பிரார்த்தித்தது குறிப்பிடத்தக்கது. ஒவ்வோர் ஊராரும் தத்தம் எல்லையில் இக்கூட்டத்தாரை வரவேற்று உபசரித்து வழியனுப்பியதும், அனைவருக்கும் விருந்தளித்து மகிழ்வித்ததும், ஜனங்கள் தீண்டாமை ஒழிவில் எவ்வளவு அக்கரை பாராட்டுகிறார்கள் என்பதை நன்கு புலப்படுத்தும்.

திருவாங்கூர் போய்ச் சேர்ந்ததும், பன்னிருவர் அடங்கிய ஜாதி ஹிந்து பிரதிநிதிக்கூட்டத்தார் மகாராணியைப் பேட்டிகண்டு பத்திரம் வழங்கியதைப் பற்றிய விவரத்தை மற்றொரு பத்தியில்காண்க. பத்திரத்தில்கண்ட விஷயங்களைப்பற்றி யோசிப்பதாக மகாராணியார் பதிலளித்திருக்கிறார். சமஸ்தானத்தார் இனி ஆலோசிக்க வேண்டுவது ஒன்றுமில்லையென்று நாம் கருதுகிறோம். தீண்டாமை ஒழிவுக்கு விரோதமாக எப்பொழுதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டுதானிருக்கும். அதற்காக, தாழ்ந்த ஜாதியாரின் பிறப்புரிமைகளை அவர்களுக்குக் கொடாமல் இருக்கக்கூடாது. வாயில்லாப்பிராணிகள் செல்லும் பாதைகளில், பகுத்தறிவுள்ள மானிடர் செல்லக்கூடாதென்று கூறுவது நகைப்பிற்கிடமாகவே இருக்கிறது. இதைப்பற்றிப் பன்முறை நாம் எழுதியிருக்கிறோமாதலின் மீண்டும் அவைகளை விரித்துக்கூற விரும்பவில்லை. திருவாங்கூர் சமஸ்தானத்தார் இச்சமயத்தில் தாராள நோக்கங்கொண்டு சமஸ்தானக் குடிகளில் பெரும்பாலோருடைய விருப்பப்படி. தீண்டாதாருக்குப் பொதுச்சாலைகளில் ஜாதி ஹிந்துக்களுக்கிருக்கும் உரிமைகளை அளிப்பாராக. இந்தியா முழுவதும் தீண்டாமை ஒழிவதற்குத் திருவாங்கூர் வழிகாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

இடியேறு

வீரத்தாய்

அலி சகோதரர்களின் தாயார் விண்ணுற்றார். வீரத்தைப்பெற்று வீரத்தை வளர்த்து அவ்வீரத்தையே போற்றிவந்த பீ அம்மன் ஆண்டவன் அடியிணை சேர்ந்தார். அவருடைய புன் முறுவலும், வளைந்த யாக்கையும் எமது கண்முன் நிற்கின்றன; வெண்சிலை வார்த்தை யாடுவதுபோல் அவர் மேடைமீதமர்ந்து வழங்கிய வீர உரைகள் இன்னும் எமது செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அந்தோ! அலி சகோதரர்களுக்கு நாம் எங்ஙனம் ஆறுதல் கூறவல்லேம்? அறிவிலும், உருவிலும், ஆண்மையிலும் சிறந்த இரண்டு சிங்கங்களைப் பெற்று, அவர்கள் தேசத்தின் பொருட்டுச் செய்யும் தியாகங்களைக் கண்டு பெருமகிழ்ச்சிகொண்ட அன்னையை இனிநாம் எப்பொழுது காண்போம்? எமது துயரம் எம்மைத் தடைசெய்கிறது. அலி சகோதரர்கள், தம் அன்னையை முன்னறிதெய்வமாகக் கொண்டாடி, 'தாய்சொல் துறந்தால் வாசகமில்லை' என்பதை மதித்து நடந்துவந்தனர். தாயார் விருப்பப்படி மக்கள் நடப்பதையும் மக்கள் உணர்ச்சியை மதித்துத் தாய்மார் நடப்பதையும் இக்காலத்தில் ஒருங்கே காண்டல் அரிதென்றே கூறவேண்டும். ஆனால் அலி சகோதரர்களும் பீ அம்மனும் ஒற்றுமைப்பட்டிருந்த பான்மை வியக்கத்தக்கதாம். அன்னையாரை இழந்து அல்லலுறும் அலி சகோதரர்களுக்குத் தேசத்தாரின் பொருட்டு எமது அநுதாபத்தைச் செலுத்துகிறோம்.

"பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதிரேற்—கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று."—நாலடி.

புதிய மந்திரிசபை

இங்கிலாந்தில், கன்ஸர்வெட்டிவ் கட்சியாரின் புதிய மந்திரிசபை ஏற்பட்டுவிட்டது. கோயலிஷன் அரசாங்கம் நடைபெற்றிருந்த காலத்தில் தனி கன்ஸர்வெடிவ் கட்சியினரின் றும் பிரிந்துசென்ற, லாயிட்ஜார்ஜ் அரசாங்கத்தில் மந்திரிப் பதவிகளை வகித்த லார்ட் பர்க்கன்ஹெட்டும், ஸ்ரீமான்கள் ஆஸ்டீன் சேம்பர்லேனும், சர்ச்சிலும் தற்போதைய அரசாங்கத்தில் மந்திரிப்பதவிகள் அளிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் கன்ஸர்வெட்டிவ் கட்சி, எவ்வித பிளவுகளுமின்றி, ஒற்றுமையுடன்வலுத்து நிற்கிறது. மற்றும், எதிர்க்கட்சிகளின் அங்கத்தினர்களைக் காட்டிலும் சுமார் இருநூறுபேரை பெரும் பான்மையோராகக் கொண்ட இவ்வரசாங்கம் ஐந்து வருஷகாலம் உறுதியுடன் ஆட்சிபுரியும் என்பதில் ஐயமில்லை. ஸ்ரீமான் சேம்பர்லேன் அந்நிய நாட்டு மந்திரியாகவும், ஸ்ரீமான் வின்ஸ்டன் சர்ச்சில் பொக்கிஷ மந்திரியாகவும், லார்ட் பர்க்கன்ஹெட் இந்தியா மந்திரியாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியா மந்திரி

இந்தியா மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கும் லார்ட்பர்க்கன்ஹெட் சிறந்த நியாயவாதி: லாயிட் ஜார்ஜ் அரசாங்கத்தில் லார்ட் சான்ஸலராக இருந்தவர். டையர் வாதம் லார்ட்ஸ் சபையில் நடைபெற்றபோது, இவர் தளபதி டையரின் செயலைக் கண்டித்த அரசாங்கத்தார் வெளியிட்ட அபிப்பிராயத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார் என்பதைக்கொண்டு, இவர் இந்தியா விஷயத்தில் தாராள நோக்கத்துடன் நடந்துகொள்வர் என்று சிலர் ஆறுதலடைகின்றனர். சமத்துவம், சகோதரத்துவம் முதலிய செம்மொழிகளையே தனது நோக்கமாகக்கொண்ட ஒரு கட்சியாரால் நியமிக்கப்பட்ட லார்ட்ஒலிவியர் இந்தியாவுக்குப் புரிந்த நன்மைகள் இப்பொழுது அடக்குமுறையாகத் தலைவிரித்தாடுகின்றன! இனி குறுகிய கட்சியைச் சேர்ந்த மந்திரியால் ஏராளமான நன்மைகள் விளைந்துவிடப் போகின்றன! இத்தகைய எண்ணங்கொண்டுள்ளோரைக்கண்டு நாம் இரங்காமலிருக்க முடியவில்லை.

லார்ட் விண்டர்டன்

உதவி இந்தியா மந்திரியாக லார்ட் விண்டர்டன் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஸர் ஜார்ஜ் லாயிட் நியமிக்கப்படுவோரென்று சொல்லப்பட்டது. அவருக்குக்கிடைத்திருந்தால், பம்பாய் வாசிகள், தங்களுடைய பழைய கவர்னரைப் பாராட்டி ஒரு சந்தோஷத் தந்தியாவது கொடுத்திருக்கலாம். லார்ட் விண்டர்டன் இந்தியாவுக்குப் புதியவரல்ல; இந்தியாவும் அவருக்குப் புதியதன்று. முன்னைய பால்ட்வின் அரசாங்கத்தின்போது கூட இவர் உதவி இந்தியா மந்திரியாக இருந்தவர். இவரைப்பற்றி நாம் அதிகமாக வாசகர்களுக்கு எடுத்துக் கூற வேண்டுவதில்லை. ஸ்ரீமான் சீநிவாச சாஸ்திரி, இங்கிலாந்து சென்றிருந்து திரும்புங்காலை இந்தியா மந்திரிகாரியாலயத்திற்குச் சென்றிருந்தபோது அவருக்கு இவர் மரியாதைசெய்தனுப்பினர் என்பதைமட்டும்ஈண்டுத் தெரிவிக்க விரும்புகிறோம். சமீபத்தில் 'ஸ்பெக்டேடர்' என்ற பத்திரிகையில் இவர் இந்தியாவின் நிலையைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இந்தியாவில் ஹிந்து-முஸ்லீம் வேற்றுமைகள் இருக்கின்றனவென்றும், தீண்டாமை ஒழியவில்லை யென்றும் இவைகளினால் அதற்குப் பொறுப்பாட்சி கொடுத்தல் பொருந்தாதென்றும் வரைந்திருந்தார். இதனால் இவருடைய நோக்கங்கள் நன்கு புலனாகும். ஆதலின் இவருடைய நியமனம் எவருக்கும் ஆச்சரியத்தையாவது, மகிழ்ச்சியையாவது உண்டுபண்ணாது என்பது நிச்சயம்.

இன்னும் உற்சாகத்தை விடவில்லை

இங்கிலாந்தில் நடைபெற்ற தேர்தல் சம்பந்தமாக நாம் எழுதியபோது லிபரல் கட்சி சீர்குலைந்து போய்விட்டதாக எழுதினோம். இனித் தலையெடாதவாறு இது சீர்குலைந்து போயிற்று என்பதே எமது கருத்து. ஆனால் ஸ்ரீமான் ஆஸ்க்வித் இதற்கு மாறுபடப் பேசியிருக்கிறார். இவர் இன்னும் உற்சாகத்தை விடவில்லை. லிபரல் கட்சியின் எதிர்காலத்தில் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறார். ஆனால், லிபரல் கட்சிக்கு எதிர்காலம் என ஒன்று இருக்கிறதா என்று நாம் கேட்கிறோம். 1895-ம் வருஷத்தில் இதைவிடக் கேவலமான நிலைமையில் லிபரல் கட்சி இருந்ததென்றும், ஆதலின் இப்பொழுதுள்ள நிலைமையைக் கண்டு எவரும் தளர்ச்சியடைய வேண்டியதில்லையென்றும் இவர் கூறினர். ஸ்ரீமான் லாயிட்ஜார்ஜ் தளர்ச்சியடையமாட்டார். ஆனால் 1895-ம் வருஷத்து நிலைமையுடன் இப்பொழுதுள்ள நிலைமையை ஒப்பிடுவது பொருந்தாது என்று நாம் கருதுகிறோம். 1895-ம் வருஷத்தில் இரண்டு கட்சிகளே முக்கியமானவைகளாயிருந்தன. அப்பொழுது தொழிற் கட்சி வலுப்பெற்றிருக்கவில்லை. இப்பொழுது மூன்று கட்சிகள் இருக்கின்றன. தொழிற்கட்சி தோன்றி வலிமை பெற்று நிற்குமிக்காலத்தில், லிபரல் கட்சிக்கு என்ன வேலையிருக்கிறதென்று நாம் கேட்கிறோம். அக்கட்சி சிதறுண்டு தொழிற் கட்சியிலும் கன்ஸர்வெட்டிவ் கட்சியிலும் ஒடுங்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை.

ஆலோசிக்கப்படவில்லையா?

லார்ட்ரெடிங், வங்காளத்தில் அவசரச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு முன்னர். தமது நிருவாக சபையிலுள்ள ஐரோப்பிய அங்கத்தினரை மாத்திரம் கலந்து யோசித்தனரென்றும், இந்திய அங்கத்தினர்கள் ஆலோசிக்கப்படவில்லை யென்றும் ஒரு வதந்தி உலவுகிறது. இஃதெவ்வளவுதூரம் உண்மையென்று நாம் கூற முடியாது. ஆனால் இஃது உண்மையாயின், இந்திய அங்கத்தினர்கள் இன்னும் ஏன் இராஜீநாமா செய்யவில்லை யென்று கேட்கிறோம்.

ஸ்ரீமான் சாஸ்திரியாரின் கண்டனம்

வங்காளத்தில் அவசரச்சட்டம் பிரயோகிக்கப்பட்டதைப்பற்றிப் பலமாகக் கண்டித்து ஸ்ரீமான் சீநிவாச சாஸ்திரியார் 'சர்வெண்ட் அப் இந்தியா' பத்திரிகையில் ஒரு நீண்ட கட்டுரை எழுதியிருக்கிறார். நிராபாதிகள்கூட இந்தச் சட்டத்தால் துன்புறக் கூடும் என்றும், இங்ஙனம் துன்புற்றிருக்கின்றனர் என்பதற்குப் பழைய அநுபவங்கள் இருக்கின்றன வென்றும் பொருள்படும்படி எழுதியிருக்கிறார். இவருடைய நடைப்போக்கும், கட்டுரையில் காணப்படும் கருத்துகளும் நம் உள்ளத்தைக் கவர்கின்றன. இராஜப் பிரதிநிதி இந்த அவசரசட்டத்தை உபயோகித்தது தவறு என்பது இவர் அபிப்பிராயமானால், அத்தவறைப் பரிகரிக்க இவர் என்ன செய்தார்? இன்னும் இவர் மிதவாதத்திலேயே நம்பிக்கைகொண்டிருக்கிறாரா? ஏன் இவர் காங்கிரசில் சேர்ந்து உழைக்கக் கூடாது?

நல்ல வேலை

வங்காள அவசரசட்டத்தை ரத்து செய்து விடவேண்டுமென்று இந்தியா சட்டசபையில் ஒரு ... சோதா கொண்டுவரப்பட்டப் போகச் ... சொல்லப்பட்டதை நேயர்கள் அறிவார்கள். ... து கொண்டுவரப்படுவதற்கு இராஜப் ... ரதிநிதி அநுமதி கொடுக்கமாட்டார் என்று 'ஸ்டேட்ஸ்மான்' பத்திரிகையின் நிருபர் தெரி... கிறார். இஃதுண்மையானால், கன்ஸர்வே... டிவ் அரசாங்கம் ஆதிக்கமடைந்த பிறகு ... வருடைய ஆதரவு இருக்கிறதென்ற நம்பிக்கையுடன், லார்ட் ரெடிங்கினால் பிரயோ...க்கப்படும் முதல் அதிகாரம் என்றே இதனை கூறுவோம். பண்டித நேருவின் மசோதாக்கு இடங்கொடுத்த மறுப்பதனால், ... சபையினருடைய சாதாரண உரிமை... அநுபவிப்பதற்குக்கூட இவர் தடைசெய்கிறார் என்றே கூறவேண்டும். லார்ட்ரெடிங் இவ்விஷயத்தில் நீதியுடன் நடந்துகொள்கிறாரா என்று அவர் தம் மனச்சான்றைக் கேட்பாராக.

மதுவிலக்கு

புதுக்கோட்டை நகரபரிபாலன சபையார் தங்கள் எல்லைக்குள் இருக்கும் மதுபானக் கடைகளை எடுத்துவிட வேண்டுமென்று தீர்மானித்திருப்பதாக அறிகிறோம். இது பலர்க்கு மகிழ்ச்சியைக்கொடுக்கும். சமீபத்திலேயே, புதுக்கோட்டை சட்டசபையினர் மதுபானத்தை ஒழிக்க முயற்சிகள் செய்யப்படவேண்டுமென்று தீர்மானஞ் செய்தனர். இங்ஙனமே இந்தியாவிலுள்ள எல்லா நகரபரிபாலன சபைகளும், மதுக்கடைகளை நகர எல்லைக்கு வெளியே ஒதுக்கிவிடுமோனால், எவ்வளவோ நன்மைகள் உண்டாகும். ஏழை மக்கள், தங்கள் வருவாயில் ஒரு சிறுபாகமேனும் மிகுதிப்படுத்தித் தங்களுடைய பிற்கால வாழ்க்கையில் உபயோகப்படுத்திக்கொள்வார்கள். மதுபானத்தினால் எத்தனையோ குடும்பங்கள் நாசமாகிவருகின்றன. அவைகளை அழிவினின்றும் மீட்க என்ன வழி? கூடியவரையில், குடிக்குமாறு தூண்டும் ஆசையை மட்டுப்படுத்த என்னென்ன முறைகள் உண்டோ அவைகளைச் சாவதான வழியில் செய்யவேண்டும். இப்பொழுது காங்கிரஸ், கள்ளுக்கடை மறியலை நிறுத்தி விட்டிருப்பதால், மதுபானக்கடைகளை நகர எல்லைக்குள் இராதவாறு செய்தால், குடி ஒரு சிறிதளவேனும் குறையும்; மதுபானக்கடைகள், ஜனநெருக்கமுள்ள இடங்களில் இருப்பதால் ஏற்படும் தொந்தரவுகள் நீங்கும்.

ஸர் ஜார்ஜ் லாயிட்டின் மறுப்பு

சீர்திருத்த விசாரணைக் கமிட்டி முன்னர் ஸர் சிமன்லால் சேதால்வாட் சாட்சியங் கூறியபோது, பம்பாய் மாகாணத்தில், அதன் கவர்னரான ஸர் ஜார்ஜ் லாயிட், சீர்திருத்தத்தைச் சரியாக வேலை செய்யவில்லை யென்றும் மந்திரிமார்கள் சாதாரண ஆலோசனை சொல்வோராகவே கருதப்பட்டனரென்றும் கூறினர். இதை மறுத்து ஸர் ஜார்ஜ் லாயிட் "லண்டன் டைம்ஸ்" பத்திரிகைக்கு ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களிலும் பம்பாய் மாகாணத்திலேயே சீர்திருத்தம் வெற்றியுடன் வேலை செய்ததென்றும், நிருவாக சபை அங்கத்தினர்களும் மந்திரிமார்களும் 'ஒன்றாகவே, அரசாங்க நிருவாக விஷயங்களைக் கவனித்து வந்தனரென்றும் எழுதியிருக்கிறார். ஸர் ஜார்ஜ் லாயிட் கவர்னராக இருந்தவர்; ஸர் சிமன்லால் சேதால்வாட் நிருவாக சபை அங்கத்தவராக இருந்தவர். ஆதலின் இருவருக்கும் அரசாங்க இரகசியங்கள் தெரிந்திருக்க வேண்டும். இருவரும் ஆதாரத்துடனேயே தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுவதாகத் தெரிவிக்கிறார். இதில் எவருடைய அபிப்பிராயத்தை நாம் ஏற்றுக்கொள்வது? இன்னும் என்ன நடக்கிறதென்று பார்ப்போம்.

லார்ட் சைடன் ஹாமின் அச்சம்

லார்ட் சைடன்ஹாம், இந்தியாவின் நிலைமையைப்பற்றி மீண்டும் கவலை எடுத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டார். இவர் இந்தியாவின் நிலைமையைப்பற்றி எழுதியுள்ள ஒரு கட்டுரையில் பின்வரும் வாக்கியங்கள் காணப்படுகின்றன:— "சுயஆட்சி மசோதா ஒன்றைத் தயாரிப்பதில் ஸ்ரீமதி பெசண்ட் முனைந்திருக்கிறார். இதனால் இந்தியாவில் குழப்பமே ஏற்படும். துறவியான ஸ்ரீமான் காந்தி உண்ணாவிரதம் பூண்டிருக்கிறார்." இதனோடு நில்லாமல், ஸ்ரீமான் மாண்டேகு, இந்தியா மந்திரியாக நியமிக்கப்பெற்ற பிறகு, இந்தியாவில் கொலைகள் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன என்று கூறுகிறார். இவருடைய அறிவு ஏன் இவ்வளவு கேவலமாக மழுங்கிவிட்டதென்று நாம் ஆச்சரியப்படுகிறோம். பெசண்டம்மையின் சுயஆட்சி திட்டத்தினாலேயே, இந்தியாவில் கலகமேற்படும் என்று இவர் கருதுவாரானால், சுயராஜ்யக்கட்சியாருடைய வேலைகளைப்பற்றியாவது, மற்ற அரசியல் கட்சியினருடைய வேலைகளைப்பற்றியாவது இவர் என்ன அபிப்பிராயங்கொண்டிருக்கின்றனர் என்பதை நாம் அறிய விரும்புகிறோம். இந்தியாவில் அமைதி ஏற்படுத்தும் பொருட்டு இவர் ஏன் பால்ட்வின் அரசாங்கத்தாரால் இந்தியா மந்திரியாக நியமிக்கப் படக்கூடாது?

தமிழ்மகாநாடு காணேம்

ஒவ்வொரு மொழியினரும் பாஷை விருத்திக்காகப் பெருமுயற்சிகள் செய்து வருகின்றனர். தமிழ் தொன்மை சால்[illegible]தியென்றும், அது பண்டைகாலில் சிறப்பும் பெற்றிருந்ததென்றும், பல மொழி[illegible] இக் னின்றும் பிரிந்தனவென்றும் நாம் [illegible]பருமை பாராட்டிக்கொண் டிருக்கிறோம். ஆனல் தமிழ் நாட்டாராகிய நாம் த[மிழ்] மொழி வளர்ச்சிக்கு இதுகாறும் என்ன [செ]ய்திருக்கிறோம் என்பதே எமது கேள்[வி]. இதை நினைக்கும்போது, நாம் தலை கு[னிந்]து நிற்க வேண்டியவரேயாகிறோம். சமீ[பத்]தில் வடநாட்டில் ஹிந்தி மகாநாடு ஒன்று நடைபெற்றது. அதன் நடவடிக்கைகள் பத்திரிகைகளில் வெளியிடப்பட் டிருக்கின்றன. அதைக் கண்ணுறும்போது, தமிழ் மகாநாடு கூடி, மொழி வளர்ச்சிக்கான முயற்சிகளைச் செய்யுமோ என்றும் எம் உள்ளம் ஏங்குகிறது. சாதிச் சண்டையிலும் சமயச் சண்டையிலும் வீறிட்டெழுந்து நிற்கும் தமிழ்நாடு, மொழி முன்னேற்றத்திற்காகச் சிறிதளவேனும் முயற்சிசெய்யாதா? ஹிந்தி மொழியிலேயே, நகரபரிபாலன சங்கங்களின் நடவடிக்கைகள் நடைபெறவேண்டுமென்றும் ஹிந்தி மொழியிலேயே இந்திய சரித்திரம் ஒன்று எழுதப்பட வேண்டுமென்றும் சில தீர்மானங்கள் ஹிந்தி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இத்தகைய துறைகளில் நம் தமிழ் நாடும் முன்னேற்றம் அடையவேண்டியிருக்கிறது.

முயற்சி செய்வரோ?

இவைகளுக்காகத் தமிழர் இயக்கம் ஒன்று ஏன் தோற்றுவிக்கக்கூடாதென்று நமக்குத் தெரியவில்லை. சாதி வேற்றுமையையும், சமயக் கோட்பாடுகளையும், மொழி முன்னேற்றத்திற்காகச் செய்யப்படும் முயற்சியில் கொண்டு புகுத்துவது அறியாமையாம். தமிழ் மொழியைத் தம் தாய்மொழியாகக் கொள்ள எவருக்கும் உரிமை உண்டு. காலஞ்சென்ற பெஸ்கி பாதிரியையும், போப்பையரையும் தமிழர் என்றே நாம் கூறுவோம். அவர் தமிழுக்காக உழைத்த அளவு இப்பொழுது எத்தனை தமிழர் உழைக்கின்றார் என்று நாம் அறிய விரும்புகிறோம். தமிழ் மொழியின் தற்கால நிலையைப்பற்றி இங்கு நாம் அதிகமாகக் கூறவேண்டுவதில்லை. தெருக்களிலும் பிரசாலைகளிலும் காணப்படும் தமிழ் விளம்பரங்களைக்கொண்டே, தமிழின் தற்கால நிலை புலனாகும். 'சிரோன்மணிகளும் நாகரீகர்களும்'!— கொடுமை! எத்தனை புலவர்! எத்தனை பண்டிதர்! குஜிலிக்கடை புத்தகங்களும், நாவல்களும் தமிழ் மொழிக்கு ஆபரணங்களாய் விளங்குகின்றன. இவைகளை நினைக்கும்போது, உருகாத தமிழர் உள்ளம் இருக்கிறதேயென்று நாம் விசனியாமலிருக்க முடியவில்லை. தமிழ் நாட்டார், இனியேனும் தமிழ் மகாநாடு கூட்ட முந்துவார்களா? இதற்குமுன் இரண்டொரு மகாநாடுகள் கூடி, அவை இதுகாலை சமாதிநிலையிலிருக்கின்றன என்பதை நாம் அறியாமலில்லை. அவைகளேனும் எழுமோ?

மகாத்மாவின் பதில்

கல்கத்தா நகரபரிபாலன சபையார் காந்தியடிகளுக்கு அளித்த உபசாரப்பத்திரத்திற்கு அவர் அளித்த பதிலில் ஒரு நகர பரிபாலன சங்கத்தின் கடமை என்ன என்பதைப்பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார் ஒரு நகரபரிபாலன சங்க எல்லைக்குள்ளிருக்கும் ஏழைமக்களுடைய வாசஸ்தலங்களின் நிலைமையைக்கொண்டே அச்சங்க வேலையைக் கவனிக்க வேண்டுமென்றும், அரண்மனைகளாலும், பணக்காரர்கள் வசிக்கும் இடங்கள் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன வென்பதைக் கொண்டும் கவனிக்கக்கூடாதென்றும் குறிப்பிட்டிருப்பதை இந்தியாவிலுள்ள நகரபரிபாலன சங்கங்கள் கவனிக்குமாறு வேண்டுகிறோம். இந்தக் குறிக்கொண்டு ஆராய்ச்சிசெய்தால், இந்தியாவிலுள்ள அநேக நகரபரிபாலன சங்கங்கள் தங்கள் கடமையைச் சரியாகச்செய்ய வில்லையென்றே கூறலாம். அரசாங்கத்தார்இவ் விஷயத்தில் எவ்வளவு கவலையீனமாயிருக்கின்றனரென்பதைப்பற்றி நாம் அதிகமாகக் கூறவேண்டுவதில்லை. இதனல், நகரபரிபாலன சங்கங்களில் அங்கம் பெற்றிருக்கும் காங்கிரஸ் வாதிகளின் கடமை இன்னதென்று நாம் எடுத்துக் காட்டவேண்டுமோ? முக்கியமாகச் சென்னையில், சுகாதார நிலைமை சீர்கேடுற்றிருக்கிறது. ஏழைமக்களும், நடுத்தர வகுப்பாரும் வசிக்கும் இடங்களின் நிலைமை மிகக் கேவலமாயிருக்கிறது. எத்தனை பிரதிநிதிகள், தங்கள் தொகுதிக்குச் சென்று ஜனங்களின் குறைகளைத் தெரிந்துகொள்கிறார்கள் என்று நாம் கேட்கிறோம். தேர்தல் காலத்தில், இந்தப் பிரதிநிதிகள் காட்டும் சுறுசுறுப்பில் நூற்றில் ஒருபங்கேனும் சாதாரண காலத்தில் காட்டினல் போதும். குழாய் நீரைப்பற்றியும், சாக்கடைகளின் அலங்கோலத்தைப்பற்றியும் நாம் பன்முறை கூவியிருக்கிறோம். காங்கிரஸ் அங்கத்தினர்கள் இவைகளைக் கவனிப்பார்களாக.

மற்றோர் அங்கத்தினர்

இந்தியா அரசாங்கத்தார் மிகுந்த சுயர்த்தர். தாம் செய்வதாகத் தீர்மானித்த ஒன்றை நிறைவேற்றுவதில் பெரிதும் முனைந்து நிற்பர். டாட்ஹண்டர் கமிட்டி நியமனத்தைப் பற்றியும் அது சம்பந்தமாக இந்தியா சட்டசபையார் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பற்றியும் நாம்சென்றவாரம் எழுதியிருந்தோம். இப்பொழுது கிடைத்திருக்கும் செய்திப்படி, சர்தார் ஜோகேந்திரசிங் மேற்படி கமிட்டியில் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது. இவர் இராஜ்யசபையில் ஓர் அங்கத்தினர். வரிவிசாரணைக்கமிட்டியில் விவசாயிகளின் பிரதிநிதியாக ஒருவர் நியமிக்கப்படவேண்டுமென்று இவர் அச்சபையில் ஒரு தீர்மானங் கொண்டு வந்தார். அதை அரசாங்கத்தார் அங்கீகரித்துக் கொண்டனர். எனவே, அதற்குரிய சன்மானம் இவருக்கே கிடைத்து விட்டது. வரிவிசாரணைக் கமிட்டியைக் கலைத்துவிட்டு, பொருளாதார நிலைமையைப் பற்றி விசாரணை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட வேண்டுமென்று இந்தியா சட்டசபையார் செய்த தீர்மானத்தின் கதி என்னவாயிற்று என்று மீண்டும் கேட்கிறோம். சட்டசபையின் தீர்மானத்தை அவமதிக்கும் பொருட்டே சர்தார் ஜோகேந்திரசிங் நியமிக்கப்பட்டாரா?

பெசண்டம்மையின் அபிப்பிராயம்

இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சியினரும் வங்காள அடக்கு முறையைக் கண்டித்துவருகின்றார். மிதவாதிகளாகிய ஸ்ரீமான் சீநிவாசசாஸ்திரியும், ஸர் நீலரத்தின சர்க்காரும் இதனைப் பலமாகக் கண்டிக்கின்றனர் எனின் நாம் அதிகமாகக்கூறவேண்டுவதில்லை. ஆனல் ஸ்ரீமதிபெசண்டம்மையார் மாத்திரம் அடக்கு முறையை ஆதரித்துக்கொண்டு வருவது ஆச்சரியமாயிருக்கிறது. இவ்விஷயத்தில் இந்தியா முழுவதிலும் அம்மையார் ஒருவரே தனியராக இருக்கிறார். லார்ட் ரெடிங்கும், லார்ட் லிட்டனும் முற்போக்கான நோக்கமுடையவர்களென்றும் அராஜக இயக்கம் இருக்கிறதென்ற ஆதாரத்தின்பேரிலேயே இவர்கள் இந்தச் சட்டத்தைப் பிரயோகித்து இருக்க வேண்டுமென்றும் பொருட்பட சில கட்டுரைகள் வரைந்து வருகிறார். சுயராஜ்யக் கட்சியை நசுக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இவ்வடக்குமுறை பிரயோகிக்கப்பட்டிருக்கிறதென்று தமக்கு எவரேனும் நிரூபிப்பாரானல், தாம் தம் ஆதாரவை நிறுத்தி விடுவதாகவும், அதை எதிர்ப்பதாகவும் எழுதி வருகிறார். சுயராஜ்யக் கட்சியை ஒடுக்கவே இவ்வடக்குமுறை பிரயோகிக்கப் பட்டிருப்பதாக எல்லாத்தலைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார். அம்மையாருக்கு எவ்வித அத்தாட்சி யாரிடத்திலிருந்து ருஜு வேண்டும் என்று நாம் கேட்கிறோம். இச்சமயத்தில் தேசமனத்தும், பொதுஜனங்களுடைய உரிமையைப் பாதிக்கக்கூடிய விஷயத்தில் ஒரு முகமான அபிப்பிராயத்தை வெளியிடும் போது, அம்மையார் தனியராய் நின்று அரசாங்கத்தை ஆதரித்து நிற்பது அழகாயில்லை என்று மட்டும் கூறுவோம்.

விநோத பதில்

இம்பீரியல் பாங்கி வழக்கு சென்னை உயர்தர நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருக்கும் போது 'சுயராஜ்யா' பத்திரிகையின் நிருபரை, ரிஜிஸ்ட்ரார் காலால் உதைத்ததாகக் கூறப்பட்ட செய்தியை நேயர்கள் அறிவார்கள். இதைப்பற்றிச் சென்னை சட்டசபையில் ஒரு கேள்விபிறந்தது. அப்பொழுதுஅரசாங்கத்தார், தாம் இதைப்பற்றிப் பத்திரிகைகளில் படித்ததாகவும், இவ்விஷயம் பிரதம நீதிபதியைப் பொறுத்ததென்றும் பதில் கூறிவிட்டார். இதைப்பற்றிய விவரத்தைஹைகோர்ட்டாரிடமிருந்து பெறமுடியாதாவென்று கேட்ட ஒரு கேள்விக்கு, அதைப்பற்றி வேறு கேள்வி கேட்கப்படவேண்டுமென்று சட்ட அங்கத்தினர்கூறினர். இதைப்பற்றிநீதிபதி முடிவுசெய்தது அரசாங்கத்தாருக்குத் திருப்தியளிக்கிறதா வென்று பொருளுண்டாகுமாறு கேட்ட மற்றொரு கேள்விக்கு. அந்தக்கேள்வி கேட்கப்படவேண்டியது அநாவசியம் என்று கருதப்பட சட்ட அங்கத்தினர் பதில் கூறினர். மிகுந்த இராஜதந்திரத்துடன் தாம் பதில்கூறிவிட்டதாகச் சட்டஅங்கத்தினர் மகிழ்ச்சிகொள்ளலாம். ஆனல் இந்த விடைகள் யாருக்கு எவ்விததிருப்தியை யளிக்கும் என்று நாம் அறிய விரும்புகிறோம் ஹைகோர்ட் ரிஜிஸ்ட்ரார், கௌரவமான ஒரு நிருபரிடம் நடந்துகொண்ட மாதிரி சரிதானு என்று சட்ட அங்கத்தினர் தம் உள்ளத்தைக் கேட்பாராக.

சமய உணர்ச்சியை உண்டுபண்ணுவதா?

தற்காலக்கல்வி சமய உணர்ச்சியை உண்டு பண்ணக் கூடியதாயில்லை என்று பொருள் படும்படி ஸ்ரீமான் கே. சி. தேசிகாசாரியார் பச்சையப்பன் கலாசாலை வருஷாந்தக் கூட்டத்தில் கூறினர். அதற்கு விடைபிறப்பான் போல், ஸ்ரீமான் கே. பி. இராமநாத ஐயர், தற்கால கல்வி குறுகிய சமய ஞானத்தை ஊட்டவில்லை யென்றும் விரிவான, பரந்த நோக்கமுள்ள, சமரசமான சமய ஞானத்தை ஊட்டுகிறதென்றும் கூறினர். தற்காலக் கல்வியால் சமய உணர்ச்சி உண்டாகிறதென்று ஓர் இந்தியர், படித்தவர், கல்வித் துறையிலேயே பல்லாண்டுகள் உழைத்தவர் அபிப்பிராயங் கொண்டிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. தற்காலக் கல்வியைப்பற்றிச் சென்ற வாரம் நாமும் சுருக்கமாகக்குறிப்பிட்டோம். தற்காலக்கல்வி! சமய ஞானம்! எத்தகைய ஒற்றுமை! இப்பொழுதுள்ள மாணவர்களைஇருப்பதாகவே அவர்களுக்குச் சமய உணர்ச்சி இருப்பதாகப் புலப்பட வில்லையா?

1925ம் வருஷத்திலும் வெம்பிளியில் ஏகாதிபத்தியப் பொருட்காட்சி நடைபெறுமென்று லோர்ட் ஸ்டெவென்ஸன் கூறுகிறார்.

தீண்டாமை தொலைய

மகாராணியாருக்கு மகஜர்

வைக்கத்திலிருந்தும் நாகர் கோவிலிலிருந்தும் புறப்பட்ட ஜாதி ஹிந்துக்களின் ஜதாக்கள் இம்மாதம் 11உ மாலை திருவனந்தபுரத்தையடைந்தன. ஜதாக்களை வர வேற்கும் பொருட்டு நகரமெங்கும் அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. தெருக்களின் இருபுறங்களிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் நின்று கொண்டிருந்தனர். இரு ஜதாக்களும் ஒன்று சேர்ந்து தேசிய கீதங்களைப் பாடிக்கொண்டு சென்றபோது மகாராஜா தமது தந்தையுடன் ஜதாக்களைப்பார்ப்பதற்காக அவ்வழியே சவாரி வர்தார். ஜதாவைச்சேர்ந்தவர்கள் அவருக்கு வந்தனமளித்து "மகாராஜாவுக்கு ஜே" என்று கோஷித்தனர். மகாராஜா பதிலுக்கு வந்தனமளித்துவிட்டுச் சென்றார். மாலையில் நடந்த பொதுக்கூட்டத்திற்கு சுமார் இருபதினயிரம் ஜனங்களுக்குமேல் வந்திருந்தனராம். வித்தியாசங்களைப் போக்கிச்சமூக சமத்துவம் நாட்டப் படவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. ஜதாக்களின் பிரயாணத்தால் இது சம்பந்தமாகப் பொது ஜனங்களிடையே ஏற்பட்டிருக்கும் உணர்ச்சிக்கு அளவில்லையென்று தெரிய வருகிறது.

12உயன்று பன்னிரண்டு ஜாதி ஹிந்துக்கள் அடங்கிய பிரதிநிதிக் கூட்டத்தார் சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீமான் பரமேசுவரம் பிள்ளையைத் தலைவராகக்கொண்டு மகாராணியாரைப் பேட்டிகண்டு ஒரு பத்திரத்தைச் சமர்ப்பித்தார்கள். அப்பத்திரத்தில், 1865-ம் வருஷத்திலேயே பொதுச்சாலைகளில் எல்லா வகுப்பினரும் செல்லலாமென்று அரசாங்கத்தார் சாஸனம் பிறப்பித்தனரென்றும், 1884-ம் வருஷத்தில் அச்சாஸனம் மீண்டும் உறுதி செய்யப்பட்டிருக்கிறதென்றும், ஆனல் 35 வருஷத்திற்கு முன்னல் ஹைகோர்ட்டார் சாலைகளை இராஜபாட்டைகளென்றும், கிராம வீதிகளென்றும் பிரித்து இராஜ பாட்டைகளுக்கே மேற்படி சாஸனம் பொருந்துமென்று கூறிவிட்டார்களென்றும், இவ்வாறு சிரமப்பட்டுப் பொருள்கொண்டது அக்காலத்திற்கு ஏற்றதாயிருந்திருக்கலாமாயினும், அரசாங்கத்தாரின் கல்வி முறை காரணமாக இப்போது நிலைமை பெரிதும் மாறுபட்டிருப்பதால் அத்தகைய பேதம் பாராட்டுவது இனி நியாயமாகாதென்றும், கிராம வீதிகள் உட்பட எல்லா பொதுச்சாலைகளிலும் எல்லாச் சாதியினரும் செல்லலாமென்று சென்னைச் சட்டசபை செய்த தீர்மானத்தைச் சென்னை அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறார்களென்றும், சமஸ்தானத்திலுள்ள 26 லட்சம் ஹிந்துக்களில் 17 லட்சம் ஹிந்துக்களுக்கு இவ்வுரிமை மறுக்கப்பட்டிருக்கிறதென்றும், அவர்களுக்கு எல்லா பொதுச் சாலைகளிலும் செல்லும் உரிமை யளிக்கப்படுவதற்கு சாதி ஹிந்துக்கள் விரோதமாயில்லை யென்பதை நிரூபிப்பதற்கே சாதி ஹிந்துக்களின் ஜதாக்கள் மகாராணியாரைப் பேட்டிகாண வந்தனவென்றும், தர்பார் தினத்தன்று சத்தியாக்கிரஹக் கைதிகளை விடுதலை செய்ததுபோல இம் முக்கியமாக விஷயத்திலும் கருணைகாட்டி, மகாராணியார், சமஸ்தானத்தின் குடிகள் எல்லாருக்கும் சாதிமத வித்தியாசமின்றி எல்லா பொதுச் சாலைகளுக்கும் பொதுஸ்தாபனங்களுக்கும் செல்லும் உரிமைபளிக்க வேண்டுமென்றும் குறிப்பிடப் பட்டிருந்தன. அப்பத்திரத்துடன் 25,000 சாதி ஹிந்துக்கள் கையொப்பமிட்டிருந்த மகஜரையும் ஸ்ரீமான் பிள்ளை மகாராணியாரிடம் சமர்ப்பித்தார்.

மகாராணியார் பிரதிநிதிக் கூட்டத்திற்கு அளித்த பதில் பின்வருமாறு:—"மிகவும் முக்கியமான இவ்விஷயத்தைப்பற்றி உடனே பதிலளிப்பது சாத்தியமன்று. இவ்விஷயமாகச் சட்டசபைக்கு ஒரு தீர்மானம் வந்திருக்கிறது. அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் அத்தீர்மானம் விவாதத்திற்குவரும். முடிவாகக் கட்டளை பிறப்பிக்கப்படுங் காலையில் இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விஷயங்கள் நன்கு யோசிக்கப்படும்."

பின்னர், பிரதிநிதிக்கூட்டத்தார் மகாராணியாருக்கு வந்தனமளித்து விடைபெற்றுத் திரும்பினர். சட்டசபை சாதகமாகத் தீர்மானித்து விட்டால் அவர்ண ஹிந்துக்களின் நிர்ப்பந்தங்கள் உடனே நீக்கப்பட்டுவிடுமென்று பொதுவாக நம்பப் படுகிறதாம்.

தாய் நாடு

முக்கிய காரியத்தின் பொருட்டு பஞ்சாபிற்குச் செல்லவேண்டியிருப்பதால் பண்டித மாளவியா தமது வைக்கம் விஜயத்தை மூன்று வாரத்திற்குத் தள்ளிவைத்திருக்கிறார்.

* * *

அலிகாரைச் சேர்ந்த பாரிஸ்டர் ஷெர்வானி மனுச் செய்துகொண்டதின் பேரில் மீண்டும் அட்வொகேட் தொழில் நடத்த அலகாபாத் ஹைகோர்ட்டார் அவருக்கு அனுமதியளித்தனர்.

* * *

ஸர் பிராங்க் ஸ்லேக்குப் பின்னர் மத்திய மாகாண கவர்னர் பதவிக்குத் தற்போது இராஜ்யசபை அக்கிராசனராயுள்ள ஸர் மாண்டகு பட்லர் நியமிக்கப்பட்டிருப்பதாக உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

* * *

அடுத்த ஆண்டிற்கு வங்காள மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக மீண்டும் தேசபந்துதாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஸ்ரீமான் அனில்பரன்ராயின் ஸ்தானத்தில் காரியதரிசியாக ஸ்ரீமான் ஸத்கௌரி பதிராய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* * *

இவ்வாரத்து 'எங்இந்தியாவில்' மகாத்மா காந்தி எழுதியுள்ள ஒரு குறிப்பில், 31-12-1922-க்குப்பிறகு இந்தியா அரசாங்கத்தார்வாங்கும் கடன்களுக்கு இந்திய மகாஜனங்கள் பொறுப்பாளிகளல்லரென்ற கயா காங்கிரஸில் செய்யப்பட்ட தீர்மானத்தை ஆதரித்துள்ளார்.

* * *

கான்பூர் போல்ஷ்விக் சதியாலோசனை வழக்கில் தண்டனை பெற்ற நான்கு எதிரிகளும் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டிருந்தனர். நீதிபதிகள் நான்கு எதிரிகள் மீதும் குற்றம் நன்கு நிரூபிக்கப்பட்டதாக அபிப்பிராயப்பட்டு அப்பீலைத் தள்ளிவிட்டனர்.

* * *

வங்காளத்தின் தற்கால நிலையை முன்னிட்டுத் தேசிய இயக்கத்திற்குத் தலைமை வகித்து நடத்தும்படி ஸர் சுரேந்திரநாத் பானர்ஜி கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும், அவர் நோய் வாய்ப்பட்டுக்கிடப்பதால் அவ்வாறு செய்யக் கூடவில்லை யென்றும் 'பார்வர்டு' பத்திரிகை கூறுகிறது.

* * *

நஜத்துக்கும், ஹிஜாஸுக்கும் இழக்கண்ட அங்கத்தினரடங்கிய பிரதிநிதிக்கூட்டத்தை அனுப்ப மத்திய கிலாபத் கமிட்டியார் தீர்மானித்திருக்கின்றனர்:—மௌலவி கிபயதுல்லா, மௌல்விஸுலைமான் நாபி, மௌல்வி அப்துல் காதிர், ஜனப் தஸாதுக் அஹமது கான் ஷெர்வானி, ஜனப் அப்துல் அலீஸ் அன்சாரி.

* * *

வங்காளத்தில் சமீபத்தில் கைது செய்யப்பட்ட 72 பேரில் 60 பேர் சுயராஜ்யக்கட்சியைச் சேர்ந்தவர்களென்றும், அவர்களில் பெரும்பாலார் தீவிரமாக வேலை செய்து வந்தவர்களென்றும், மற்ற பன்னிருவரில் இருவர் மாறுதல் வேண்டாக்கட்சியைச் சேர்ந்த பிரபலஸ்தர்களென்றும் பண்டிதநேரு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் கூறுகிறார்.

* * *

மிஸ்டர் விமாண்டு என்னும் அமெரிக்கப் பத்திரிகை நிருபர் மகாத்மாவினிடம் பேசிக்கொண்டிருக்கையில் ஸ்ரீ அவனீந்திர நாத தாகூரினல் எழுதப்பட்ட மகாத்மாவின் படமொன்றை அவரிடம் காட்டினராம். அப்பொழுது காந்தியடிகள் "என்ன அழகு! நான் கண்ணடி பார்ப்பதேயில்லை. ஆயினும் நான் இவ்வளவு பயங்கரத் தோற்றமுள்ளவனென்று நினைக்கவில்லை" என்றாராம்.

* * *

மௌலானு முகமதலிக்கு உபசாரப்பத்திரம் அளித்ததன் சம்பந்தமாகவும், லோகமான்ய திலகரின் சலவைக்கல் உருவச் சிலையை நாட்டியதின் சம்பந்தமாகவும் பணம் செலவிடுவதைத் தடுக்கவேண்டுமென்று பூனா நகரசபையின்மீது அரசாங்கத்தார் தொடுத்திருந்த வழக்குகளில் இம்மாதம் 8உ தீர்ப்புச் சொல்லப்பட்டது. முதல் வழக்கில் ஜில்லா ஜட்ஜு தடையுத்தரவு பிறப்பித்தார். இரண்டாவது வழக்கைத் தள்ளிவிட்டு நகரசபைக்கு அரசாங்கத்தார் செலவுதொகை யளிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தார்.

9-11-24 ஸ்ரீவில்லிபுத்தூரில் ஷியூர் தாலூகா கமிட்டிக் கூட்டம் நடைபெற்றதில் வங்காளத்தில் பிரயோகிக்கப் பட்டிருக்கும் அடக்குமுறையை அழுத்தமாய்க் கண்டிப்பதோடு இத்தாலுகாவிலுள்ள ஸ்தலஸ்தாபனங்களைக் காங்கிரஸ்காரர்கள் கைப்பற்றுவதற்குத் தீவிரமாக வேலை செய்யவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

...யம் ...வதேன்?

போலீஸ் ராஜ்யத்திலிருந்து விடுதலை பெற

சென்ற வாரத்து 'எங் இந்தியா'வில் ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ் பின்வருமாறு எழுதுகிறார்:—

நான் இங்கிலாந்து சென்றிருந்தபோது பலர், இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுத்துவிட்டால் அங்கு அராஜகம் ஏற்பட்டுவிடாதா வென்று கேட்டனர். வெளிக்குத் தெரியாமல் இப்போதே அராஜகம் இருந்து கொண்டுதானிருக்கிறதென்றும், அன்னிய அரசாங்கத்தின் பொருளை 'அராஜகம்' என்னும் ஒரு மொழியில் விளக்கிவிடலாமென்று ஜே. எஸ். மில் கூறியுள்ளாரென்றும் நான் அவர்களுக்குப் பதில் கூறுவது வழக்கம். இப்போது இந்தியா முடிவு செய்யவேண்டிய பெரிய பிரச்னை வருங்காலத்தில் அராஜகம் ஏற்படாது எவ்வாறு தடுப்பதென்பதன்று; தற்போதுள்ள அராஜகத்தை எவ்வாறு தொலைப்பதென்பதேயாகும்.

இவ்வராஜகத்தின் பயனாக விளைந்த ஒரு சம்பவத்தைப்பற்றிய விவரம் எனக்கு இப்போதுதான் கிடைத்தது. மேற்படி விவரத்தைக் கூறியவர் எனது அருமை நண்பர்களில் ஒருவர். அமைதியையும், நீதியையும் பெரிதும் நேசிப்பவர். ஓர் ஈயையும் துன்புறுத்தாதவரெனில் அவரையே கூறலாம். இங்குப் பிரசுரிக்கப்படும் விவரம் சிறிதும் மிகைப் படுத்தப்படாததாகும். இந்திய உடை தரித்திருக்குங் காலங்களில் எனக்கு நேர்ந்த சொந்த அநுபவங்களைக்கொண்டு இந்தியாவில் இத்தகைய சம்பவங்கள் தினந்தோறும் நடைபெற்று வருகின்றனவென்று கூறுவேன். அந்நண்பர் தெரிவித்த விவரம் பின் வருமாறு:—

"மாலை 4-மணிக்கு ரிஜிஸ்டர் பார்ஸல் ஒன்றை அனுப்பும்பொருட்டு ஜெனரல் போஸ்ட் ஆபீஸுக்குச் சென்றேன். பார்ஸலைக் குமாஸ்தாவினிடம் கொடுத்துவிட்டு ரசீதுக்காகக் காத்துக்கொண்டிருந்தபோது நான் சிறிதும் எதிர்பாராவண்ணம் இச்சம்பவம் நடந்தது. சாதாரண கான்ஸ்டேபிள் ஒருவர் திடீரென்று அங்கு வந்து சிறிதும் மரியாதையின்றி "இந்தா, அப்பால் போ" என்றார். "நான் ரசீதுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன். நீர் இவ்வாறு மரியாதையின்றிப் பேசக்கூடாது" என்று நான் பதிலளித்தேன். அப்போது அப்போலீஸ்காரர் என் கையைப் பிடித்துக்கொண்டு "ஓ, நீர் மகா பெரிய மனிதரல்லவா?" என்று கூறிப் பலமாசப் பிடித்துத் தள்ளினர். பார்ப்போர் நகைக்கும் வண்ணம் அங்குச் சண்டைபோட எனக்கு உத்தேசமில்லை யென்றும், அவருடைய உத்தியோக எண் மட்டும் வேண்டுமென்றும் கூறினேன். அவர் தமது எண்ணைக் கூற மறுத்துத் தமது பித்தளை வில்லையை மறைத்துக்கொண்டு அப்புறம் திரும்பிக்கொண்டார். அவருடைய எண் வேண்டுமென்று நான் வற்புறுத்தியபோது அவர் கோபங்கொண்டு "நீ எவ்வளவு பெரிய மனிதனென்று நான் பார்க்கிறேன்" என்று சொல்லி என் கழுத்தைப்பிடித்து அடித்துச் சட்டையையும் தாறுமாறாகக் கிழித்துவிட்டார். கண்டவாறு திட்டவும் செய்தார்.

"அதுதான் சரி"

இத்தருணத்தில் தபால் குமாஸ்தா போலீஸ்காரரிடம் ரசீதைக் கொடுத்தார். பின்னர் போலீஸ்காரர் என்னைப் பலாத்காரமாக ஓர் ஆங்கில ஸார்ஜண்டினிடம் இழுத்துச்சென்றார். நான் அவரிடம் கான்ஸ்டேபிளின் நடத்தையைப்பற்றிக் கூறியபோது அவர்அதற்குச் சிறிதும் செவிகொடாமல் "வங்காளிகளெல்லாரும் இப்படித்தான், அகம் பிடித்தவர்கள். இவனைத் தாணவுக்குக் கொண்டுபோ" என்றார். கான்ஸ்டேபிள் அங்கு ஒரு பொய்க்கதையைக் கூறிவிட்டு என்னைத் தகிக்கும் வெயிலில் தெருக்களின் வழியாகத்தாணுவுக்கு இழுத்துச் சென்றார். வண்டிக்கு நான் பணங் கொடுப்பதாகச் சொல்லியும்பயனில்லை. பின்னல் (இதைப் பற்றி நான் போலக் தெரு அவுட்போஸ்டு உத்தியோகஸ்தரிடம் தெரிவித்தபோது அவர் "அதுதான் சரி, வண்டி வைப்பதற்கு நீர் என்ன இங்கிலீஷ்காரரா?" என்றார்.)

தாணவிலிருந்த உத்தியோகஸ்தர் கூறிய தன்பேரில் அங்கிருந்து போலக் தெரு அவுட்போஸ்டுக்கு மீண்டும் இழுத்துச் செல்லப்பட்டேன். விசாரணை அறையில் மற்ற சாட்சிகளுடன் சுமார் ஒருமணி நேரம் காத்திருந்த பிறகு என் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பத்து ரூபா பணங்கட்டியதன்பேரில் மறுநாள் நீதி மன்றத்துக்கு வரும்படி கூறி என்னை விடுதலை செய்தனர்.

மறுநாள் விசாரணையில் எனக்கு விரோதமான சாட்சியம் எதுவுமில்லாமையால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆயினும், வழக்கை விசாரித்த கௌரவ மாஜிஸ்ட்ரேட் நான் 'ஒரு கர்வம்பிடித்த இளைஞன்' என்பதை நினைவூட்டி 'எச்சரிக்கையுடன்' விடுதலை செய்வதாகக் கூறினர். பின்னர், என்னைப் பலாத்காரமாகத் தாக்கியதற்காகவும், திட்டி அவமதித்ததற்காகவும், காரணமின்றிப் பிடித்து வைத்ததற்காகவும் கான்ஸ்டேபிள்மீது வழக்குத் தொடுத்தேன். நீதிபதி இச்சம்பவத்தைப் பற்றிப் போலீஸ் இலாகா விசாரிக்க வேண்டுமென்று முடிவு செய்தார். போலீஸ் சம்பந்தப்பட்ட விஷயம் போலீஸ் உத்தியோகஸ்தர்களால் சரியாக விசாரிக்கப்பட மாட்டாதென்று என்னுடைய வக்கீல் கூறியதற்கு நீதிபதி, நான் அதற்கு அவருக்குச்சட்டம் கற்பிக்க வரவில்லையென்று கூறிவிட்டார்.

போலீஸ் நீதி

[illegible] காலமும் செலவிட்டேன். [illegible] சிரமப்பட்ட தன் பின்னர் மேற்படி போலீஸ்காரருக்குப் பதினைந்து நாள் விசேஷ தேகப்பயிற்சி (ஸ்பெஷல் டிரில்) தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாகவும், அதைக்கொண்டு நான் திருப்தியடையவேண்டுமென்றும் எனக்குப்போலீஸார் அறிவித்தனர்.

என்னுடைய விடுமுறைநாள் அநேகமாகக் கழிந்துவிட்ட படியாலும், அலைந்தலைந்து நானும் அலுத்துவிட்டபடியாலும், மேலே வழக்கு நடத்தினலும் இதைவிட அதிக நியாயம் கிடைக்காதென்று என் வக்கீல்கள் கூறியபடியாலும் மீண்டும் வழக்குத் தொடாமல் விட்டுவிட்டேன். இச்சம்பவம் இவ்வாறு முடிந்தது.

இதைப்பற்றி அபிப்பிராயம் கூறுவது அநாவசியம். அரசியல் விஷயத்தில் என்னுடைய மனப்பான்மை முழுவதும் இச்சம்பவத்தினல் மாறிவிட்டது. என் கண்கள் திறந்தன. 'பிரிட்டிஷ் இந்தியாவின் குடிகளாகிய நாம் எவ்வளவு அநாதரவான நிலைமையிலுள்ளோம்' என்பது இப்பொழுது தான் புலனாயிற்று. பொது ஜனங்களினுடைய பணத்தைப் பெற்று பிழைப்புநடத்தும் போலீஸ்காரர் பொது ஜனங்களுக்குக் காப்பு அளிப்பதற்குப்பதிலாகத் தாங்களே பெரும் அபாயமாயிருந்து வருகின்றனர். நீதி வழங்குவதற்கேற்பட்ட ஸ்தாபனம் அடியிலிருந்து நுனிவரையில் கேடுற்றிருக்கிறது. எங்குபார்த்தாலும் சாதித்துவேஷம். நான் அவமதிக்கப் பட்டதைப் பற்றிமட்டும் நான் கவலைப்படவில்லை. அரசியல் அமைப்பின் மிக முக்கியமான உறுப்பு இவ்வாறு சீர் கெட்டிருப்பது தான் எனக்கு அதிக கஷ்டத்தைத் தருகிறது. சத்தியத்தில் அதிதீவிர நம்பிக்கைக்கொண்டு, இவ்வுலகில் சமாதானவழியில் அதை நிலைநாட்ட முயலும் நம்போல்வாரின் முன்புள்ள வேலை எவ்வளவு மகத்தானது!"

"எனது சிறையனுபவங்கள்"

"எனது சிறையனுபவங்கள்" என்ற தலைப்பின் கீழ் மகாத்மா காந்தி எழுதிவந்த கட்டுரைகளை அமெரிக்காவில் சிகாகோ நகரில் வெளியாகும் 'யூனிடி' பத்திரிகை அவ்வப்போது பிரசுரித்து வந்தது. கட்டுரைகள் முடிந்ததும் அவற்றின் சிறப்பைப்பற்றி மேற்படி பத்திரிகை எழுதிய ஒரு குறிப்பின் கடைசியில் பின்வருமாறு கூறுகிறது:— மகாத்மாவினுடைய ஆத்மா அடைந்துள்ள உன்னத நிலையை மேற்படி கட்டுரைகள் மீண்டுமொரு முறை வெளியிடுகின்றனவாதலின் அவை விலைமதிக்க வொண்ணுதனவாகும். தமது தாய் நாட்டை ஆளும் அன்னியரால் கைது செய்யப்பட்டுப் பயங்கரமான தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் எழுதிய கட்டுரைகள் இவை. ஆயினும் அக்கட்டுரைகள் முழுவதும் ஆராய்ந்து தேடியும், கோபம், பகைமை, ஆத்திரம், பழிவாங்குமெண்ணம் இவைகளைக்காட்டக்கூடிய ஒரு மொழியேனும் அகப்படவில்லை. மாசற்ற தூய்மையும், கலங்கா நெஞ்சமும், தீரமும், தவருத அன்பும், பிரியமும், தாராள குணமுமே அவைகளில் ததும்புகின்றன. நாம் வசிக்கும் இக்காலத்திலே தமது பகைவர்களிடத்து அன்பு செய்யும் ஒருவர் இருக்கிறார்! ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு தினத்திற்குப் பின்னர் இத்தகைய அதிசயத்தை இம்மானிலத்தோர கண்டதில்லை!

பிரிட்டன் அரசியல்

புதிய மந்திரி சபை

கிரேட் பிரிட்டன் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி வெற்றியடைந்ததன் பயனுக ஏற்பட்டுள்ள புதியமந்திரிசபையின் அமைப்பு வருமாறு:—

மிஸ்டர் பால்ட்வின்—முதன் மந்திரி, காமன்ஸ் சபையின் தலைவர்.

லார்ட் பர்க்கன் ஹெட்—இந்தியா மந்திரி.

மிஸ்டர் சர்ச்சில்—சான்ஸலர் ஆப் தி எக்ஸ் செக்கர். (பொக்கிஷ மந்திரி)

மிஸ்டர் ஆஸ்டன் சாம்பர்லின்—வெளி நாட்டு மந்திரி.

மார்க்விஸ் ஸாலிஸ்பரி—லார்டு பிரைவி ஸீல்.

லார்ட் கர்ஸன்—லார்டு பிரஸிடெண்டு ஆப் தி கௌன்ஸில், பிரபுக்கள் சபைத்தலைவர்.

லார்ட் கேவ்—லார்ட் சான்ஸலர்.

ஸர் டபிள்யூ ஜாயின்ஸன் ஹிக்ஸ்—உள்நாட்டு மந்திரி.

ஸர் லாமிங் வொர்திங்டன் எவான்ஸ்—யுத்த மந்திரி.

ஸர் ஸாமுவேல் ஹோர்—ஆகாயப்படை மந்திரி.

மிஸ்டர் பிரிட்ஜ்மான்—கடற்படை மந்திரி.

ஸர் பிலிப் லாயிட்கிரீம்—வியாபார போர்டு அக்கிராசனர்.

மிஸ்டர் நெவில் சேம்பர்லின்—சுகாதார மந்திரி.

ஸர் ஜான் கில்மோர—ஸ்காட்லந்து மந்திரி.

லார்ட் யூஸ்டேஸ் பர்ஸி—கல்வி போர்டு அக்கிராசனர்.

ஸர் ஆர்தர் ஸ்டீல் மெயிட்லாண்டு—தொழில் மந்திரி.

ஸர் டக்ளாஸ் ஹாக்—அட்டர்னி ஜெனரல்.

வைகவுண்ட் செஸில்—லங்காஸ்டர் டச்சியின் சான்சலர்.

வைகவுண்ட் பீல்—வேலைக்கமிஷனர்.

மிஸ்டர் அமெரி—குடியேற்றநாட்டு மந்திரி.

காலத்தின் அருமை

நூல் சந்தா அனுப்புவோரும், மாகாண கதர் போர்டுகளும் குறிப்பிட்ட காலத்தில் சந்தாக்களை அனுப்பாது தாமதம் செய்வதைப்பற்றிச் சென்ற வாரத்து 'எங் இந்தியா'வில் மகாத்மா எழுதியுள்ள ஒரு வியாசத்தில் இந்தியரின் தாமத குணத்தைப்பற்றிச் சில மொழிகள் கூறியுள்ளார். முக்கியமாக, பொதுக்கூட்டங்களுக்குச் செல்லும் தலைவர்களும் மற்றும் காங்கிரஸ் ஊழியர்களும் அம்மொழிகளைப் பெரிதும் கவனித்தல் வேண்டும். அவை பின்வருமாறு:— "இந்தியர் காலத்தின் அருமை அறியாதவர்கள் என்பதாக நம் பேரில் அடிக்கடி குற்றம் சுமத்தப்படுகிறது. பொதுவாகக் கூறின், நாம் காலதாமதம் செய்யும் சாதியேயாவோம். குறிப்பிட்டகாலத்திற்குப் பிந்திவருவோர், நான்கு மணிநேரம் முன்னுடி வருவோர் ஆகிய இருவரும் காலத்தின் அருமையறியாதவர்களே. கிராமத்தான் ஒருவன் ரயில் பிரயாணம் செய்ய விரும்பும் போது வண்டி வருவதற்கு நான்குமணி நேரத்திற்கு முன்னமேயே புகைவண்டி நிலையத்திற்குச் செல்கிறான். அவனுக்கு வண்டி கிடைத்துவிடலாம். ஆனல் அதைவிட முக்கியமான நூறு காரியங்களை அவன் அதன் பொருட்டு அசட்டை செய்துவந்திருப்பான். படித்த வகுப்பினராகிய நாம் எந்த விஷயத்திலும் தாமதம் செய்கிறோம். நமது பொதுக் கூட்டங்கள் குறித்த காலத்தில் ஆரம்பிக்கப் படுவதில்லை. ஒருவர் வாராதன்பொருட்டு ஆயிரக்கணக்கான ஜனங்களைக் காக்கவைப்பது சகஜமாகி விட்டது. இவ்வாறு காத்திருக்கக்கூடிய ஒரு தேசத்தாரின் பொறுமைக்குணம் புகழ்ச்சிக்குரியதே. ஆனல் அத்தேசத்தாரின் முன்னேற்றத்திற்கு இவ் வழக்கம் பெருந்தடையாயிருக்கும்."

இந்திய ஊழியச் சங்கத்தாரின் வெள்ளக்கஷ்ட நிவாரண வேலை

இந்திய ஊழியச் சங்கம், இளைஞர் கிறிஸ்தவச்சங்கம் (ஒய். எம். சி. ஏ.) இவைகளின் ஆதரவில் தென்னிந்தியாவில் இதுகாறும் நடைபெற்றிருக்கும் வெள்ளக்கஷ்ட நிவாரண வேலையைப்பற்றிய ஓர் அறிக்கை வரப்பெற்றோம். மேற்படி சங்கங்களின் ஊழியர்கள் கஷ்டப்படுவோர்களுக்குச் சிறந்த உதவி புரிந்திருப்பதாக அவ்வறிக்கையிலிருந்து அறிந்து மகிழ்வுறுகிறோம். வெள்ளச்செய்தி கேட்டவுடனே ஸ்ரீமான் ஜி. கே. தேவதார் பம்பாயில் ஸ்ரீமான் கே நடராஜன் முதலியவர்களின் துணைகொண்டு கஷ்ட நிவாரணத்திற்கு நிதி வசூல் செய்யத் தொடங்கி ரூ. 26,500 வரையில் வசூலித்து அனுப்பியதுபோற்றத்தக்கது. மேற்படி இருசங்கங்களுக்கும் வெள்ளக்கஷ்ட நிவாரணத்திற்காக மொத்தம் கிடைத்த தொகை ரூ. 44,989-0-0 ஆகும். (மலையாளத்துக்கு அனுப்பப்பட்ட தொகை இதில் சேரவில்லை.) இத்தொகையைக்கொண்டு பற்பல ஜில்லாக்களிலும் நடந்திருக்கும் கஷ்ட நிவாரண வேலைகளின் சுருக்கமான விவரம் வருமாறு:— திரிசிராப்பள்ளி ஜில்லா லால்குடி தாலூகாவில் ஒய். எம். சி. ஏ. யைச்சேர்ந்த மிஸ்டர் பாப்ளி ரூ. 7000 செலவு செய்து 950 வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறார். கரூர், குழித்தலை தாலூகாக்களில் ஸ்ரீமான் பி. கோதண்டராவ் என்பவர் கரூர் காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீமான் கந்தசாமி செட்டியாரின் உதவிபெற்று வேலை செய்து வருகிறார். இதுகாறும் 207 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 2000 அவர் உதவியுள்ளார். வீடுகள் கட்டப்படுங் காலங்களில், அவ்வேலையில் ஈடுபட்டிருக்கும் குடும்பங்களுக்குத் தான்யம் முதலியவைகள் வழங்கி உதவி புரிகிறார். தஞ்சாவூர் ஜில்லாவில் திருக்காட்டுப்பள்ளிக்குச் சுற்றுப்பக்கங்களில் ஸ்ரீமான் கே. ஜி. சிவஸ்வாமி 539 குடும்பங்களுக்கு ரூ. 5300 உதவியிருக்கிறார். இவைகளில் 424 குடும்பங்கள் ஆதித்திராவிட வகுப்பைச் சேர்ந்தவை. பெரிதும் கஷ்டத்தி லாழ்ந்திருந்தவர்களுக்கே உதவியளிக்கப்பட்டிருக்கிறது. தற்போது ஸ்ரீமான் கே. ஜி. சிவஸ்வாமி மாயவரம் தாலூகா மணல் மேட்டைத் தலைமை ஸ்தலமாக வைத்துக்கொண்டு வேலை செய்துவருகிறார். இந்தப் பக்கத்தில் 23 கிராமங்களில் 241 குடும்பங்களுக்கு உதவி யளிக்கப்பட்டிருக்கிறது. சீகாழி தாலூகாவில் ஒய். எம். சி. ஏயைச் சேர்ந்த ஸ்ரீமான் சுவாமி தாஸ் கஷ்ட நிவாரண வேலை நடத்திவருகிறார். அவர் 45 கிராமங்களில் 893 வீடுகள் கட்டிக் கொள்ள உதவி யளித்துள்ளார். இவைகளில் 700 வீடுகளுக்குமேல் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் சொந்தமானவை. இதைத்தவிர அவர் ரூ. 500-ம், 41 மூட்டை அரிசியும் கஷ்டப்படுவோருக்கு விநியோகித்திருக்கிறார். இந்தப் பிரதேசத்தில் மொத்தம் ரூ. 6000 செலவிடப்பட்டிருக்கிறது. இந்திய ஊழியச்சங்கத்தை சேர்ந்த ஸ்ரீமான் எம். எஸ். ஏகாம்பரராவ் கோபி செட்டிபாளையத்திலும், ஒய். எம். சி. ஏயைச் சேர்ந்த ஸ்ரீமான் ஜயகரன் பவானி தாலூகாவிலும் கஷ்டநிவாரண வேலை செய்துவருகிறார்கள். பவானியில், கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவைகளின் மூலமாக உதவியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சிதம்பரம் தாலூகாவிலுள்ள கஞ்சன் கொல்லை, அரசூர் கிராமங்களில் ஸ்ரீமான் பி. கோதண்டராவ் 91 குடும்பங்களுக்கு ரூ. 750 உதவியுள்ளார். கஞ்சன் கொல்லையில் ரூ. 250 பெறுமான துணிகளும் விநியோகிக்கப்பட்டன. இந்திய ஊழியச் சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் எம். எஸ். மாதவராவும், ஒய். எம். சி. ஏயைச் சேர்ந்த ஸ்ரீமான் ஜாகோபியும் மலையாளத்தில் கஷ்ட நிவாரண வேலை செய்துவருகிறார்கள். இத்தகைய அரிய ஊழியம் செய்துவரும் மேற்படி சங்கத்தாருக்கு ஆதரவு அளித்து, அவர்கள் மேற்கொண்டுள்ள சிறந்த பணியைத் தொடர்ந்து நடத்தி முடிப்பதற்கு வேண்டிய எல்லா உதவியும் செய்யுமாறு தமிழ் நாட்டாரை வேண்டிக்கொள்கிறோம்.

மாயவரம் வெள்ளக்கஷ்ட நிவாரணக்கமிட்டி

மாயவரம் வெள்ளக்கஷ்ட நிவாரணக் கமிட்டியின் ஆதரவில் நடந்திருக்கும் நிவாரண வேலைகளைப்பற்றிய ஓர் அறிக்கை வரப்பெற்றோம். ஆத்தக்குடி, சேமங்கலம், ஒலையம்புத்தூர் இம்மூன்று கிராமங்களிலும் கஷ்டமடைந்தவர்களுக்கு உதவி யளிக்கப்பட்டதாக அவ்வறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. பி. டபிள்யூ. டி. அதிகாரிகளின் அசட்டையினல் ஆத்தக்குடி கிராமவாசிகள் பாய்ச்சல்வசதியின்றிப் பெரிதும் கஷ்டமுற்றிருப்பதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது.

சூரிய வெளிச்சம் அ[illegible]யாத அதிசயப் பிரதேச[illegible]ள்

[illegible]யினும் கறுத்த இருள்[illegible] பொறுக்க முடியாத குளிரும் நிறைந்து [illegible] ஒரு பிரதேசம்; சூரியகிரணங்கள் [illegible] எட்டிப் பார்த்ததேயில்லை; முடிவற்ற[illegible]னத் தோன் றும் விஸ்தாரம்; மரம் செடி[illegible]களாவது, காற்றாவது இல்லாதவிடம்; [illegible] விகாரமான பிராணிகள் மட்டும் அங்கு [illegible]ந்துகொண் டிருக்கும்; எந்த மனிதனும் [illegible]ங்கு ஒரு கண நேரமும் உயிருடன் இருக்க[illegible]யாது; மனித முயற்சியினாலான எந்தப் [illegible]பொருளாயினும் அங்கு வைக்கப்பட்டால் அந்தக் கணமே, உலகிலுள்ள மலைகளெல்லாவற்றினுடைய கனத்தையும்விட அதிகமான கனத்தினால் நசுக்கப்பட்டு நாசமாகிவிடும்; இத்தகைய பிரதேசமொன்றைக் கற்பனாசக்தியினால் பாவித்துக்கொள்ளுங்கள். நமது பூவுலகில் பெரும்பாகம் இத்தகைய விடமேயாகும். எங்ஙனமெனில், சமுத்திரத்தின் அடிப்பாகம் இத்தகைய பிரதேசமே யென்று நவீன சாஸ்திர ஆராய்ச்சி நமக்கு அறிவிக்கின்றது.

இப்பூமியின் மேற்பரப்பில் கிட்டத்தட்ட முக்காற்பாகம் நீரில் மூழ்கியிருக்கிறது. பூமியின் நிலப்பரப்பு சுமார் 57,000,000 சதுர மைல்; நீர்ப்பரப்பு 140,000,000 சதுரமைல். ஆனால் இந்தப்புள்ளி விவரத்தைக்கொண்டு ஆழ்கடலின் விஸ்தாரத்தின் அளவை உள்ளபடி உணர்தல் எளிதன்று.

உலகிலுள்ள பெரிய மலைகளைக் காண்போர் அவைகளின் உயரத்தை எண்ணிப் பிரமித்துப்போகின்றனர். ஆனால் கடல் மட்டத்திற்குமேல் நிலத்தின் சராசரி உயரத்தைவிடச் சமுத்திரத்தின் சராசரி ஆழம் ஐந்து மடங்கு அதிகமானதெனில் அஃது நமக்கு எவ்வளவு பிரமிப்பை யளிக்கவேண்டும்? பெரிய மலைகளையும் சேர்த்துக் கணக்கிடுங்கால் கடல்மட்டத்திற்கு மேல் நிலத்தின் சராசரி உயரம் அரை மைலுக்கும் குறைவுதான். சமுத்திரத்தின் சராசரி ஆழமோ 2½ மைலாகும். சமுத்திரத்தில் அரைவாசிப் பிரதேசத்தின் ஆழம் 2½ மைலுக்கும் 4 மைலுக்குமிடையேயிருக்கும். இஃதன்றி கடலில் சில விடங்களில் பெருங் குழிகள் இருக்கின்றன. இவற்றுள் ஏதேனுமொன்றில், 5½ மைல் உயரமுள்ள எவரெஸ்ட் மலையை எடுத்துப்போட்டால் அது முழுவதும் மூழ்கிச் சிகரத்திற்குமேல் ½ மைல் உயரம் தண்ணீர் நிற்கும்.

இதைவிடப் பெரும் ஆச்சரியம்! பூமியின் நிலப்பரப்பு முழுவதையும் கடல்மட்டத்திற்குச் செதுக்கிச், செதுக்கிய கல்மண் முதலிய வெல்லாவற்றையும் சமுத்திரத்தில் போட்டால் சமுத்திரத்தின் தோற்றத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படாது. அதற்குப் பின்னும் சமுத்திரம் 1¼ மைல் ஆழமுள்ளதாயிருக்கும்.

சமுத்திரத்தின் ஆழமான பிரதேசங்களை இதுகாறும் எந்த மனிதனும் சென்று பார்த்ததில்லை. எக்காலத்திலும் மனிதன் அங்குச் செல்ல முடியாதென்று சாஸ்திர ஆராய்ச்சிக்காரர் கூறுகின்றனர். நீரின் அபரிதமான தள்ளும் சக்தியினால் நசுங்காமலிருக்கக்கூடிய எத்தகைய நீர்மூழ்கிச் சாதனத்தையும் அமைத்தல் அசாத்தியமான காரியம். குறைந்த ஆழமுள்ளவிடங்களுக்குமே இது பொருந்துமாயின், கடலின் அடித்தரைக்குச் செல்வதைப்பற்றிக் கூறவேண்டுவதேயில்லை. ஆனால் புதிதாக ஏற்பட்டுள்ள சாஸ்திரங்களில் ஒன்றாகிய சமுத்திர சாஸ்திர வல்லுனர் சில கருவிகளைக் கண்டுபிடித்து அவற்றின் உதவியினால் கடலின் உள் பிரதேசங்களைப்பற்றி ஆராய்ச்சி நடத்திவருகின்றனர்.

கடல் நிறம்

கடலின் 'குழிகள்' என்று மேலே கூறப்பட்டவை சாய்வான பக்கங்களையுடைய பள்ளத்தாக்குகளல்ல. அவை குறுகிய, செங்குத்தான பிளவுகளாகும். அவை கடலின் அடித்தரையில் ஏற்படும் பூகம்ப அதிர்ச்சியினால் ஏற்பட்டவை யென்று கருதப்படுகின்றன. நிலத்திலுள்ளது போலவே சமுத்திரத்திற்குள்ளும் அநேகமலைகள் இருக்கின்றன.

கடலின் பெரும்பாகம் அழகிய தெளிந்த நீலநிறமுடையதா யிருப்பதேன் என்பது இதுகாறும் திட்டமாக நிர்ணயிக்கப்படவில்லை. நீலவானத்தின் பிரதிபலிப்புக்கும், கடலின் நீலநிறத்துக்கும் ஏதேனும் சம்பந்தமிருக்கலாம். ஆழமும் ஒரு காரணமாயிருக்கலாம். ஏனெனில் நிலத்துக்கு வெகு தூரத்திலுள்ள விடங்களில் கடல் நீர் நல்ல நீல நிறமாகவும், ஆழமற்ற விடங்களில் பச்சை நிறமாகவும் இருக்கின்றது. கடல்நீருக்குள்ளே இருக்கும் தாவரவர்க்கங்களும் அதன் நிறம் மாறுபடுவதற்குகாரணமாகின்றன. செங்கடல்(Red sea) தன்பெயரையும், செந்நிறத்தையும் பெற்றிருப்பதற்கு நீர்மட்டத்திற்கருகே மிதக்கும் செந்நிறக் கடற் பூண்டுகளே காரணம். கரையையடுத்த பிரதேசங்களில், மண்ணின் தன்மையும், தாதுப்பொருள்களும் நீருக்கு நிறமளிக்கின்றன. நீரின் தூய்மைக்கும் அதன் நிறத்துக்குங்கூடச் சம்பந்தம் இருக்கின்றது. நன்கு வடிகட்டிய சுத்தமான நீருக்கு [illegible] நீலநிறம்

பொருந்தி விளங்குவதிலிருந்து இதை அறியலாம்.

நிற்க, கடல்நீர் தெளிந்து துல்லியமாயிருப்பதெல்லாம் நீர்மட்டத்திற்கருகில் தான். 3000 அடி ஆழத்துக்குக் கீழே சூரிய வெளிச்சம் ஊடுருவிச் செல்வதில்லை. தாவரங்கள் வாழ்வதற்குச் சூரிய வெளிச்சம் இன்றியமையாததாதலால் கடலில் 3000 அடிக்குக் கீழே கடற்பூண்டுகளே கிடையாது. சூரியனின் வெப்ப கிரணங்களோ 1500 அடிக்குக் கீழே செல்வதில்லை. இதன்பயனாக மேற்பரப்புக் கருகில் மட்டும் கடல்நீர் சிறிது சூடுள்ளதாயிருக்கின்றது; கீழே குளிர்ந்த நீர்தான். 600 அடிக்குக் கீழே நீரின் வெப்பநிலை எக்காலத்திலும் மாறுவதேயில்லை. 3000 அடிக்குக் கீழேயுள்ள நீர்த்திரள் அவ்வளவும் 40 டிக்ரிக்கும் அதிக குளிர்ச்சிபொருந்தியது. கடலின் அடித்தரையிலுள்ள நீரோ 32 டிக்ரியேயுள்ளது. இன்னும் 3½ டிக்ரி குறைந்துவிட்டால், அதாவது 28½ டிக்ரியாகிவிட்டால் நீர் உறைந்து பனிக்கட்டியாகிவிடும்.

கடல் உப்பு

சூரிய வெப்பத்தால் கடல் நீர் அதிகமாக நீராவியாகிக்கொண்டிருக்கும் செங்கடல் போன்ற பிரதேசங்களில் உப்பு அதிகமாயிருக்கும். சமுத்திர முழுவதிலும் மொத்தம் 5,000,000 கன மைல் உப்பு இருக்கிறதாம். அதாவது சராசரி 1000 பவுண்டு தண்ணீரில் 35 பவுண்டு உப்பு இருக்கிறது. இதுகாறும் நமக்குத் தெரிந்துள்ள 92 தாதுப்பொருள் Elementகளில் 32 கடல்நீரில் இருக்கின்றன. அமெரிக்காவில் உள்ள ஆறுகள் மட்டும் ஆண்டுதோறும் 500,000,000 டன் உப்புக்களைச் சமுத்திரத்தில் கொண்டுவந்து சேர்க்கின்றனவாம்.

சமுத்திர ஜலம் நின்றவிடத்திலேயே நிற்பதில்லை. ஓரிடத்திலிருந்து ஓரிடம் மாறிக்கொண்டே யிருக்கிறது. சமுத்திரத்திலேயே ஆறுகளும் ஏரிகளும் இருக்கின்றன. வெப்பநிலை, காற்று, தண்ணீரின் கனம் இவைகளின் மாறுதலின் பயனாக மேற்கண்ட ஆறுகள், ஏரிகள் முதலியவை ஏற்படுகின்றன. இம்மாறுதல்களுக்குச் சூரியனே காரணம்.

நிலத்திலிருப்பதைவிட நீரில் அதிகபிராணிகளும், தாவரங்களும் வாழ்ந்து வருகின்றன. அவைகளின் பல்வேறு வடிவங்களும் வர்ணங்களும் பார்ப்போருக்குஅச்சத்தையும் அதிசயத்தையும் விளைவிப்பனவாக விருக்கும்.

கடல் மூழ்குவதையே தொழிலாகக் கொண்டவர்கள் 200 அடி ஆழம்வரையில் இறங்கியிருக்கிறார்கள். அதற்குக் கீழே இறங்கமுடியாததன் காரணம் நீருக்கு அங்கு ஏற்படும் அபரிமிதமான தள்ளும் சக்தியே. நீருக்கு இத்தள்ளும் சக்தி அதன் கனத்தினால் ஏற்படுகிறது. ஓர் ஏரியிலோ, ஆற்றிலோ மூழ்கி மண்ணெடுக்க முயன்றவர்கள் இத்தள்ளும் சக்தியை உணர்ந்திருப்பார்கள். அப்போது காதில் ஏதோ ஓர் ஓசை கேட்கும். தலையிலும் மார்பிலும் பெருங்கனத்தை வைத்து அமுக்குவதுபோல் தோன்றும். இத்தகைய சக்தி கடலின் அடித்தரையில் அபாரமாயிருக்கின்றது. அங்கு ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் சராசரி 2½ டன் நிறையுள்ள சக்தி அமுக்குவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. பள்ளங்களில் இச்சக்தி சதுர அங்குலத்திற்கு 5 டன்னுக்கு மேலே இருக்கின்றது.

ஒருவெறும் கண்ணாடிக்குப்பியைத் தக்கையால் அடைத்து அதனுடன் கனமான பொருளொன்றைக் கட்டிக் கடலில் போட்டால் என்ன சேரிடும்? திரும்பக் குப்பியை மேலே தூக்கும்போது தக்கை நீரின் கனத்தினால் தாக்கப்பட்டு உள்ளே சென்றிருக்கும்; குப்பிக்குள் நீர்நிரம்பியிருக்கும். உள்ளே வெறுமையாயுள்ள கண்ணாடி உருண்டையொன்றை அவ்வாறு போட்டால் அது நசுங்கிப்போய் விடும். அல்லது அதிலுள்ள கண்ணுக்குத் தெரியாத சிறுதுவாரங்களின் வழியாகத் தண்ணீர் உள்ளே போயிருக்கும்.

கடலில் ஆழமான விடங்களிலுள்ள சில பிராணிகள் தாவரங்களைப்போல் காணப்படும். அவை அழகிய தோற்றத்தையும் பலவகை வர்ணங்களையும் கொண்டிருக்கும். அவற்றின் உடல் செடியின் அடித்தண்டைப்போல விருக்கும். தலையில் நன்கு மலர்ந்த புஷ்பங்களைப் போன்ற பொருள்கள் விளங்கும். ஆயினும் இவைகள் தாவரங்கள் அல்ல; பிராணிகள் தான். ஏனெனில் அவ்வளவு ஆழமானவிடங்களில் தாவரங்கள் முளைப்பதில்லை.—மாடர்ன் ரிவியூ.

தர்மபுரிதாலூக்கா மகாநாடு

மேற்படி மகாநாடு நவம்பர் 22, 23-ந் தேதி சனி ஞாயிறுகளில் தர்மபுரியில் தமிழ்நாட்டு தேசபக்தர் ஸ்ரீமான் டாக்டர் வரதராஜலு நாயுடு அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும் என்றும் உபசாரணை கமிட்டி மெம்பா கட்டணம் ரூ. 2—0—0 என்றும் மகாநாட்டிற்கு பிரதிநிதி சந்தா 0—8—0 என்றும் விசிட்டர் சந்தா 0—4—0 என்றும் ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

Printed and Published by T. V. Kalyanasundara Mudeliar (Editor) at the Sadhu Press, 44-Bazaar Road, Royapettah, Madras.

END OF ISSUE